தென்றல்

ஆசிரியர் கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 4 | சென்னை | 14-12-57 | சனிக்கிழமை | இதழ் 24

மனித மனம் ஏழைகளைக்கண்டு இரங்குகிறது; விலங்கு பூட்டப்பட்டிருக்கும் நிரபராதிகளைப் பற்றிக் கவலைபபடுகிறது. அதே மனம், உதவி செய்யமுடியாத போது இரக்கப்பட்டுப் பயனில்லை என்று உணர்ந்தபோதிலும் அடுத்த கணம் ஏழைகளைக் கண்டு இரங்கத்தான் செய்கிறது.

தமிழ் நாட்டு அரசியலில்-மாற்றுக் கட்சிக்காரர்கள் கூட ஒரே ஒரு காங்கிரஸ்காரருக்காக

காட்டு முல்லை

இரக்கப்படுகிறார்கள். 'ஐயோ, அவர் இப்படியா போக வேண்டும்' என்று மெத்த வருத்தப்படுகிறார்கள்.

"எதிர் காலத்தில் அவர் நேருவாக வருவார்; சர்ச்சிலாக வருவார்" என்றெல்லாம் எதிர்பார்த்தவர்கள், நம்பிக்கொண்டிருந்தவர்கள் இன்றைய தினம் முகம் சுருங்கி எவருடைய சமாதானத்தையும் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் குழம்பித் தவிக்கிறார்கள். யாருக்காக அவர்களெல்லாம் மனக் கவலைகொண்டிருக்கிறார்கள்? எம். ஏ., எல். எல். பி. வரை படித்துவிட்டு நாட்டு அரசியல் நிர்வாக இயந்திரத்தில் இடம் பெற முடியாமல் தவிக்கிறாரே அந்த **அந்த செங்கல்வராயனுக்காக!**

சென்னை மாவட்டக் காங்கிரஸ் குழுத் தலைவராகத் தேர்ந்தெடுத்திருப்பதாக கடந்த வாரச் செய்தித் தாள்களிலே தகவல் வெளியாகி இருக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்டது வரவேற்கத் தக்கதுதானே என்பதை நாம் ஆராயப் புகவில்லை. அவர் ஏன் தமிழ்நாட்டு அரசியலில் ஒதுக்கப்பட்டவராக-தீண்டத் தகாதவராக வைக்கப்பட்டிருக்கிறார் என்பதே நமக்குப் புதிராக இருக்கும் ரகசியம்.

தேர்தலில் தோற்றுப்போனார் அதனால் முன்னேற முடியவில்லை - என்று ஜனநாயகத்தின் பேரில் பழியைப் போட்டுவிட்டு கொட்டாவி விடுவார்கள் இன்றைய அரசியல் 'தீபச்சுடர்'கள். உண்மைதான். தேர்தலில் தோற்றவர்களெல்லாம் செங்கல்வராயனைப்போல் ஒதுக்கப்பட்டிருந்தால், செங்கல்வராயன் ஒதுக்கப்பட்டிருப்பது குறித்து மற்றவர்கள் சந்தேகிக்க நியாயமில்லை. அது ஜனநாயகத்திற்கு முரணானது. எல்லோருமே அப்படி நடத்தப்படுவதில்லை. ஒரு சிலருக்கு ஜனநாயக மாளிகையின் கொல்லைக்கதவின் தாழ்ப்பாள் திறந்துவிடப்படுகிறது! மதில் ஏறிக்குதித்தாவது-ஓட்டைப் பிரித்தாவது, ஜன்னலை உடைத்தாவது உள்ளே வந்துவிட சிலர் முயல்கிறார்கள். வெற்றியும் பெறுகிறார்கள். ஜனநாயகத்தின் 'கூர்க்கா'க்கள் கண்களையா மூடிக்கொள்கிறார்கள். இல்லை. அதுபோன்ற தவறான 'பாஸ் போர்ட்'களை செங்கல்வராயனுக்கும் தர வேண்டும் என்று நாம் கூறவில்லை. தமிழ்நாட்டு அரசியலில் 'செங்கல்வராயன் தொடர்ந்து பலி வாங்கப்பட்டு வருகிறார்' என்று அரசியல் வட்டாரத்தில் பேசிக்கொள்ளப்படுவது உண்மைதானே என்ற சந்தேகம் எழுகிறது.

தேர்தல்களிலெல்லாம் அவர் தோற்றார்- உண்மைதான். அவரை வெற்றி பெறச் செய்ய தமிழ்நாட்டுக் காங்கிரஸ் எடுத்துக்கொண்ட முயற்சிகள்என்ன? எந்தெந்த இடங்களில் போட்டியிட்டால் செங்கல்வராயன்தோற்பாரோ அந்தந்த இடங்களில் செங்கல்வராயனை நிறுத்தி வைத்ததுதான் தமிழ்நாடு காங்கிரஸ் அவருக்குச் செய்த (?) பேருதவி! போன முறை காஞ்சீபுரம்! இந்த முறை வண்ணாரப் பேட்டை!

செங்கல்வராயன் தலை விதியிலே நம்பிக்கைகொண்டவர்; அதனால்தான் அவர் கவலைப்படுவதில்லை போலும்! ஆனால் அவரது தலை விதியை ஒரு சில 'காங்கிரஸ் சித்ரபுத்திரர்'கள் தான் கணிக்கிறார்கள் என்பதை உணர்ந்தும் செங்கல்வராயன் 'தலை விதி'யை நம்புகிறாரென்றால் அவருக்காக அனுதாபப்படுவதைத் தவிர வேறு வழி நமக்குத் தெரியவில்லை.

செங்கல்வராயன் காங்கிரசிலே மிகச் சிறந்த பேச்சாளர். 'அந்தக் காலத்தில் அண்ணாதுரையோடு பலமுறை வாதிட்டிருக்கிறேன்' என்று சொல்லிக்கொள்வதில் அவருக்கு அளவுகடந்த பிரியம். பாராளுமன்றப் பேச்சு முறைகளைப்பற்றியும், ஜனநாயகத்தின் தத்துவங்கள் பற்றியும் நிறையப் படித்துத் தெரிந்துகொண்டவர். அவருடைய திறமையை, அறிவாற்றலை இன்றைய 'காங்கிரஸ் பிரபு'க்கள் மதிக்கவில்லை. செங்கல்வராயன் படிப்பும் உழைப்பும், விதவையின் அழகான கூந்தலைப்போல், காட்டு நிலவைப்போல், கானகத்து முல்லையைப்போல் பயனற்றுப் போய்விடுமோ என்று காங்கிரசிலே இருக்கும் பண்பாளர்கள் கருதுகிறார்கள். **அவர்கள் அவ்வாறு வருத்தப்படுவதற்குநியாயமிருக்கிறது.**

கக்கனும் ராமையாவும் மந்திரியாக வருகிறார்கள். 'இரைப் வாட்டர்' கிருஷ்ணமாச்சாரி நிதி மந்திரி - ஆனால் அன்றுமுதல் இன்றுவரை காங்கிரஸ் ஊழியராகவே இருந்துவரும் செங்கல்வராயன் ஒரு சாதாரண மாவட்டக் காங்கிரஸ் குழுத்தலைவராகத் தான் வரமுடிகிறது. அரசியலில் நிரந்தரமான ஒரு இடத்தைப் பிடித்துக்கொடுக்க ஆளில்லை; தானாகப் பிடித்துக் கொள்ள முயன்றாலும் தடுத்து நிறுத்த ஆட்கள் ஏராளமிருக்கிறார்கள்.

— 10ம் பக்கம் —

★ 'சிலம்புச் செல்வம்'-வரலாறுதான் ! ★

சிலப்பதிகாரம் ஒரு பெரும் இலக்கியச் சுவைநூல் மட்டுமன்று அது ஒரு வரலாற்று நூலும் ஆகும்.

தமிழக வரலாறு என்ற தனியான வரலாற்று நூல் பேணப்படாமை இன்று பெரும் குறையாக இருந்துவருகிறது. என்றாலும் எஞ்சியிருக்கின்ற சில இலக்கியங்களைக் கொண்டு தமிழ் நாட்டு வரலாறு இப்படி இப்படி இருந்திருத்தல் சாலும் எனக் கோடிட்டுக் காட்டுதல் கூடும். அந்த வகையில் பெரும்பாலும் வரலாற்று விற்பன்னர்கள் இலக்கியச் செய்திகளையும் வரலாறு [illegible]னைய எடுத்தாளுகிறார்கள். தமிழர்களின் பொற்காலம் என ஒன்று இருந்த காலமேதான் சேரன் செங்குட்டுவன் வடநாட்டுப் போர் எடுப்பும் வெற்றியும் ஆக இருத்தல்கூடும். இந்த கருத்திற்கு பெரும் ஆதாரமாகச் சிலப்பதிகாரத்தையே துணையாகக் கொண்டு கூறலாம்.

சிலப்பதிகாரம், கால்கோட் காதை 158 முதல் 162 வரிகள் வரை சேரனின் போர் எடுப்புக்கு உரிய காரணத்தைக் கூறுகிறான்.

"பால குமரன்
மக்கள் மற்றவர்
காவா நாவிற்
கனகனும் விசயனும்
விருந்தின் மன்னர்
தம்மொடுங் கூடி
அருந்தமிழாற்றல்
அறிந்தில ராங்கெனக்
கூற்றங் கொண்டிச்
சேனை செல்வது"

தமிழர்களைப் பழித்துக் கூறிய ஒன்றிற்காகவே வடநாட்டுப் போர் என்றும், கண்ணகி சிலை சமைத்தற்கு உடன் கல் கொண்டு வருவதும் ஒரு நிகழ்ச்சியே எனவும் இயம்புகின்றான். இவ்வாறு கூறிய பின்னர் ஒற்றர் மூலம் தன் வருகையை வடபுலத்தார் அறிய வழியமைத்துப் பழிதுடைக்கப் புறப்படுகின்றான் புவியரசன். இவ்வாறு வடபுலம் புறப்படும் சேரமன்னன் அவர்களை முன்பொரு முறை முறியடித்த வெற்றி ஒன்றனையும் இளங்கோ அடிகள் "காட்சிக் காதை"-160 வரி முதல் 163 கூறுகின்றார்.

"கங்கைப் பேர்யாற்றுக்
கடும்புனல் நீத்தம்
எங்கோ மகளை
ஆட்டிய அந்நாள்
ஆரிய மன்னர்
ஈரைஞ் ஞாற்றுவர்க்கு
ஒருநீ யாகிய"

முன்பொரு முறை தன் தாயின் விருப்பம் காரணமாக அன்னவருக்குக் கங்கை நீராட்டுதற் பொருட்டு வடநாடு சென்றானும். அந்தக் காலத்திலும் சாதி அடிப்படை முறையில் வாழ்ந்த வடவர்கள், தென் தமிழ் வேந்தனை நூற்று வரசர்கள் படை கொண்டு எதிர்த்துப் போரிட, முடிவில் முடிமன்னன் சேரனே வெற்றிக்கொடி ஏந்தித் தன் வீர மாதாவை நீராட்டித் திரும்பினான்-என்ற ஒரு செய்தியும் இங்கு நோக்குதற்குரியது.

அவ்வாறமைந்த சேர மன்னனை, தென்புல மக்களை, தமிழை அவமதித்தமைக்காகவே அவர்கள் காவா நாவை அடக்குவதற்காகப் படை எடுத்துச் செல்லுகின்றான் செங்குட்டுவன். சேரன் படை கொண்டு வரும் செய்தி ஒற்றர் மூலம் பெற்ற வடபுல மன்னர்கள் எண்மர் ஒன்று கூடி எதிர்க்க திட்டமிட்டுக் காரியமாற்றத் தொடங்கினர். இதனைமட்டும் தெள்ளத் தெளிய இளங்கோ அடிகள் 'கால்கோட் காதை'யில் 182 முதல் 185 வரிவரை கூறுகின்றார்.

" உத்தரன் விசித்திரன்
உருத்திரன் பைரவன்
சித்திரன் சிங்கன்
தனுத்தரன் சிவேதன்
வடதிசை மருங்கின்
மன்னவ ரெல்லாம்
தென்றமி ழாற்றல்
காண்குதும் யாமென..."

இந்த எட்டு மன்னர்களைத் துணையாகக் கொண்டு அன்னவர்களின் படையையும் பக்கபலமாகப் பயன்படுத்திக் கனகனும் விசயனும் தமிழ்மன்னனின் ஆற்றலைத் தூற்றியவாறே எதிர்க்க வந்தனராம். இந்த அளவில் இளங்கோ அடிகள் வடபுலப் படை எடுப்பினை வரலாறமைக்கும் அளவுக்கு வரைந்துள்ளமை காணற்குரியது.

'படைகொண்டு பெயரும் பாசம்போல' என பண்டைய வழக்கு ஒன்று உண்டு. அது போல சேரமன்னன் வெற்றி கொண்ட செய்தி பின்னர் விரித்துரைக்கப்படுகின்றது. வாய்ப் பந்தல் வேய்கின்ற சிறுபிள்ளைத்தனம் வடவாரியர்க்கே என்பதைத் தென்னாட்டார் அன்றே தெற்றெனக் காட்டிப் போந்தார். நாகாக்கா நயவஞ்சகராம் கனக விசயரைச் சினவலைப் படுத்தினான் சேரமன்னன் அவ்விருவரும் தனியாக இல்லை, ஐம்பத்திருவர் புடை சூழப் போரிட்ட நிலையில் தென்தமிழ் வேந்தன் சிறைபடுத்திக் கல் சுமக்கச் செய்தானும். இந்தச் செய்திகள் அடுத்துவரும் சில சில அடிகளில் அமைத்துத் தரப்படுகின்றது. (கால்கோட்காதை-220-225.)

இவ்வாறு அமைந்த செய்தியை வடநாட்டு வரலாற்றில் காணப்பெறவில்லை, எனவே தென்னவர் வடநாட்டுப் போர் எடுப்பும் - வெற்றியும் வெறும் இலக்கியப் பொய்யாகும் என வரலாற்று விற்பன்னர்கள் கூறுகின்றனர். இலக்கியத்தில் கூறப்பட்ட இந்தச் செய்தி வரலாற்றுக்கு ஒவ்வாது என்று உரைக்கும் வரலாற்று விற்பன்னர்கள் "Political History of India" என்ற இந்திய அரசியல் வரலாறு (By Roy Chowdry) புத்தகத்தில் பரீக்ஷித்து மகாராஜாவின் வரலாறு விளக்குகிறார்கள். பரீக்ஷித்து மகாராஜா பிறந்து, வளர்ந்து, ஆண்ட செய்திகள் அரசியல் வரலாற்று நூலில், வடநாட்டில் ஒப்புக்கொள்ளப்படுகிறது. வடமொழி இலக்கியம் ஒன்றினையே ஆதாரமாகக் கொண்டு எழுப்பப் பெற்ற 'பரீக்ஷித்து மகராஜா' அரசியல் வரலாறு ஆகும் என்றால் தமிழ் இலக்கியமாகிய "சிலப்பதிகாரம்" செப்பும் சேர மன்னன் வீரம் ஏன் வரலாறாகாது? என்று வினா எழும். 'இலக்கியங்கள் வரலாற்றுக்குத் துணை செய்யும் கருவிகள்' எனக்கொண்டு திறந்த மனத்துடன் நோக்கினால் தமிழ் இலக்கியம் மட்டும் "பொய்" கூறுகின்றது என்று புகல்வதற்கு மனம் எழாது.

ஆனால், வடவாரியர்கள் இந்தச் செய்தியைத் தங்கள் வரலாறுகளில் - இலக்கியங்களில்- சாசனங்களில் ஏன் பொறிக்கவில்லை? என்பதேவினாவாக உள்ளது. அதற்குரிய காரணமும் "சிலப்பதிகாரம்" காட்டுகின்றது.

சிலம்பில் கால்கோட் காதையில் 225 அடி முதல் 230 அடி வரை போரினைப்பற்றியநிகழ்ச்சி விரிவாகக் கூறப்படுகிறது. தென்னவர் போருக்குப் புறப்பட்டால் வஞ்சி சூடிப் பின் வாகை சூடாமல் மீள்வதில்லை, உயிருடன் வாகை சூடவில்லை என்றால் உயிர் நீத்த உயர்ந்தோன் ஆவது தமிழ் மறவர் மரபு. ஆனால் வடவாரியர்கள் போருக்குப் புறப்படும்பொழுதே உடன் என்ன என்ன உறுதுணையாகக் கொண்டு செல்வார்கள் என்பதை இளங்கோ திறம்பட விளக்குகின்றார். தமிழன் கையிலே வேலும் வில்லும், உள்ளத்திலே உரமும் கொண்டு சென்று போரிடுவர். ஆனால் வடவாரியக் கூட்டமோ போரிடப் போட்டு வரும் ஆடையுள்

— 11ம் பக்கம் —

இந்த ஆண்டு

தென்றல் பொங்கல் மலர்

இலக்கியப் புதையலாய்-இன்பச் சுரங்கமாய் சித்திரச் சோலையாய்த் தயாராகிறது !

★

விலை ரூ. 2

டிசம்பர் 30-க்குள் முன்பணம் அனுப்பாதவர்களுக்குக் கண்டிப்பாக மலர் அனுப்பப்படமாட்டாது.

ஜனநாயகத்திற்குட்பட்ட எந்தக் கிளர்ச்சியானாலும், அந்தக் கிளர்ச்சி காங்கிரஸ் ஆட்சிக்கு எதிரானதானால், கிளர்ச்சிக்காரர்கள் 'காட்டுமிராண்டிகள், துரோகிகள்' என்றெல்லாம் அழைக்கப்படுகிறார்கள். ஆனால்வெள்ளையர் காலத்தில், அவர்களது கட்டுப்பாடுகளுக்கு அடங்கிக் கிடந்தவர்கள் நாட்டு விடுதலைக்கு என்னென்ன செயல்களைப் புரியத் தலைப்பட்டிருக்கிறார்கள் என்பதற்கு டப்ளின் நகரத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி இங்கே படம்பிடித்துக் காட்டப்பட்டிருக்கிறது. உயரப் பறந்து உலகெலாம் புகழ் சேர்த்து வரும் பண்டிதருக்கு இது தெரியவில்லையானால்...அதைக் காங்கிரஸ்காரர்களே நம்பமாட்டார்கள்.

(ஆ-ர்.)

வைஸ்ராய்க்கு வெடிகுண்டு

டப்ளின்—அயர்லாந்தின் தலைநகரம். நகரிலிருந்து நான்கு மைல்களுக்கப்பால் **ஆஷ்டவுண்** என்ற ரயில்வே ஸ்டேஷன் இருக்கிறது. ஆஷ்டவுண் பெரிய ஊரல்ல; வசிப்பதற்கேற்ற சின்ன ஊர். சென்னையில் அடையாறு-மதுரையில் சொக்கிகுளம், எப்படியோ அப்படித்தான் டப்ளினில் ஆஷ்டவுண். ஆஷ்டவுண் ரயில்வே ஸ்டேஷன் பந்தயக் குதிரைகளை இறக்குமதி செய்வதற்கே பயன்பட்டது. குதிரை வைத்திருப்போரின் எழில் மாடங்களும், கன்னிகாபவனங்களுமே அந்த ஆஷ்டவுனை அழகுபடுத்திக்கொண்டிருந்தன. சிறப்பாகக் குறிப்பிடவேண்டிய இன்னொரு முக்கியமான இடம் ஒன்று ஆஷ்டவுணில் இடம் பெற்றிருந்தது, நகரிலிருந்து பெரிய இடத்து வாலிபர்களும், அதிகாரிகளும் தினசரி ஆஷ்டவுனுக்கு வரவேண்டிய கட்டாயத்தை அந்த இடம் ஏற்படுத்திக் கொண்டு வந்தது. கெல்லி என்பவனுடைய புகழ்பெற்ற **மதுபானக்கடை** தான் அது.

எவ்வளவுதான் பெரிய பணக்காரராக இருந்தாலும், என்னதான் அளவுக்கு மீறிய செல்வாக்கைப் பெற்றிருந்தாலும், எத்தனை உயர்ந்த ரக பானங்களைத்தான் சாப்பிட்டிருந்தாலும், ஆஷ்டவுணிலிருந்து திரும்பும் வழியில் உள்ள **பீனிக்ஸ்** தோட்டத்தருகில் 'கப்சிப்' என்றுதான் யாரும் போகவேண்டும். சைக்கிள்காரர்கள் மணி அடிக்கக் கூடாது. மோட்டார்கள் 'ஹாரன்' கொடுக்கக்கூடாது. காய்கறிக் கூடைக்காரர்கள் விலை கூறக்கூடாது என்ன அப்படி, அந்த இடத்தில் மட்டும் வாய்ப் பூட்டுச் சட்டம்? அந்தத் தோட்டத்திற்குள்தான் வைஸ்ராய் மாளிகை இருந்தது. வெள்ளைக்காரர்கள் பிறநாடுகளை அடக்கி ஆண்டபோது வைஸ்ராய் என்ற உயர்ந்த பதவிக்கு இல்லாத மரியாதை ஏது? மாட்சிமை தங்கிய மகாராஜாவின் பிரதிநிதியல்லவா அவர்! அதனால்தான் ஆங்கிலேயரின் ஆளுகைக்குட்பட்ட டப்ளின் நகரத்து பீனிக்ஸ் தோட்டத்துக்கு அவ்வளவு கௌரவம் இருந்தது!

1919ம் ஆண்டு டிசம்பர் திங்களில் ஒருநாள்! காலை பதினொறு மணி இருக்கும். இருபதுக்கு மேற்பட்ட வாலிபர்கள் டப்ளின் நகரிலிருந்து ஆஷ்டவுண் நோக்கி வந்தார்கள், அவர்கள், யாரும் சந்தேகிக்காதபடி தனித்தனியாகவும், ஜோடி ஜோடியாகவும் வந்தார்கள். வந்தவர்கள் யாருமே, மறந்தும் அரசியலைப் பற்றிப் பேசவில்லை. உழவைப் பற்றிப் பேசினார்கள். மழையைப் பற்றிப் பேசினார்கள். அறுவடையைப் பற்றிப் பேசினார்கள். பரம்பரை பரம்பரையாக விவசாயத் தொழில் புரிந்துவரும் குடும்பத்தினரைப்போல் அவர்கள் பேசிக்கொண்டு வந்தார்கள். அவர்களில் யாருக்கும் உழவைப் பற்றித் தெரியாது. ஆகையால் யார் எதைச் சொன்னாலும் தவறு கண்டுபிடிக்க முடியவில்லை; தெரியவில்லை.

எல்லோரும் கெல்லியின் விடுதிக்கு வந்தார்கள். குடித்தார்கள். சிறிதுநேரம் உட்கார்ந்திருப்பதற்கு ஒரு இடம் வேண்டுமே என்பதற்காகத்தான் அவர்கள் எல்லோரும் கெல்லியின் கடைக்கு வந்திருக்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் அனைவரும்எதையோ எதிர்பார்த்திருந்தார்கள். முகச்சாயல் அப்படிக் காணப்பட்டது.

அவர்களில் ஒருவன் - அவன்தான் அந்தக் கூட்டத்திற்குத் தலைவன் - அடிக்கடி கைக்கெடிகாரத்தைப் பார்த்தான். எதிர்பார்த்த நேரம் நெருங்கிவிட்டது என்று விழிகளால் சொன்னான் அவன் நண்பர்களுக்கு. எல்லோருடைய பார்வைகளும் பீனிக்ஸ் தோட்டத்தின் பேரில் விழுந்தன. ஆயுதந்தாங்கிய போலீஸ் அதிகாரி பீனிக்ஸ் வாயிலில் நின்றுகொண்டு போக்கு வருத்தை நிறுத்திக்கொண்டிருந்தான். வெளியூரிலிருந்து வைஸ்ராய டப்ளினுக்குத் திரும்புவது இவர்களுக்கு எப்படியோ தெரிந்திருந்தது. நகரில் வேறு யாருக்கும் தெரியாது. அவ்வளவு ரகசியமாக வைக்கப்பட்டிருந்தது.

தலைவன் மறுபடியும் கடிகாரத்தைப் பார்த்தான். மணி 11-30. பீனிக்ஸ் தோட்டத்திலிருந்து நான்கு ராணுவ மோட்டார்கள் ரயில்வே ஸ்டேஷனை நோக்கிப் பறந்தன. கெல்லியின் கடையிலிருந்து வாலிபர்கள் வெளியே வந்தார்கள். திட்டமிட்டிருந்தபடி ஒவ்வொருவரும் அவரவர்கள் குறிப்பிட்டிருந்த இடங்களுக்குப் போனார்கள். அவர்களில் தலைமை வாலிபனும் இன்னொரு வாலிபனும், விடுதிக்கப் பக்கத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஒரு மொட்டை வண்டியை இழுத்துக்கொண்டு ஸ்டேஷன் பக்கமாகப் போனார்கள். போலீஸ்காரன் கதற ஆரம்பித்தான். "கவர்னர் ஜெனரல் வரப்போகிறார்! விலகு! விலகு!!" என்று துடித்தான் அவன்.

வைஸ்ராய் வரும் வழியில் மொட்டை வண்டியை நிறுத்தி விட வேண்டும் என்பது வாலிபர் படையின் ஏற்பாடு. ஆனால் அது நிறைவேறவில்லை. அதற்குள் வைஸ்ராயின் முன்னே (பைலட்)டி வந்துவிட்டான். கம்பீரமான உருவமுடைய ஒருவன் மோட்டார் சைக்கிளில் வெள்ளையரின் கொடி கட்டிப் பறந்து வந்தான். அதற்கு அடுத்தாற்போல் உயர்தர அதிகாரிகளின் இரண்டு மோட்டார்கள் பறந்தன.

தலைவன் சமிக்ஞை செய்தான். "டபார்! டபார்" என்று குண்டுகள் வெடித்தன. அதெல்லாம் சாதாரணக் குண்டுகள். கவர்னர் ஜெனரலுக்கு துணையாக வருவோரை பயமுறுத்துவதற்காக வைத்திருந்த அதிர்வேட்டுக் குண்டுகள். வாலிபர்களுக்கு எதிராக மோட்டாரிலிருந்த அதிகாரிகளும் சுட்டார்கள். அந்தக் குண்டு, - பாவம், ராஜவிசுவாசத்துடன் துவக்கத்தில் வாலிபர் தலைவனைத் தடுத்து நிறுத்திய கிழட்டுப் போலீஸ்காரனின் உயிரைக் குடித்துவிட்டது.

வாலிபர் படைக்கு அந்தச் சோகக் காட்சியைக் கண்டு களிக்க நேரமில்லை. கவர்னர் ஜெனரலின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அழகான இரண்டு வெண்புரவிகள் ஒரே அசசில் வார்க்கட்பட்ட நடன சிங்காரிகளைப்போல் 'ஜலக்-ஜலக்' என்ற இனிய நடத்தோடு ஓடிவந்தன. அவைகளுக்குப் பின்னே ஒரு அன்னம்-அன்னத்தைப் போன்ற மோட்டார்—அதுதான் வைஸ்ராயின் மோட்டார்-மெல்ல வந்துகொண்டிருந்தது.

ஆங்காங்கே நின்ற வாலிபர்களின் கண்கள் வண்டியின் பக்கமாக நின்ற தங்கள் தலைவனை நோக்கின. தலைவன் விழியால் கட்டளையைப் பிறப்பித்தான். வாலிபர்களின் கரங்கள் கால்சட்டைப் பைக்குள் நுழைந்து எதையோ எடுத்தன அத்தனையும் 'ரிவால்வர்'கள்! எல்லா ரிவால்வர்களும் வைஸ்ராயின் காரையே குறி வைத்தன. காரின்மீது நெருப்பு மழை பெய்வதுபோலிருந்தது. மோட்டார் மின்னலிட்டது. வாலிபர்கள் பாதையில் வெடிகுண்டுகளையும் உருட்டிவிட்டார்கள். மோட்டார்கள் அதில் ஏறும்போது 'டம்டும்!' என்று வெடித்தன. அப்போது அரசாங்கப் பாதுகாப்புப் படை இயந்திரத் துப்பாக்கிகளோடு தளத்திற்கு விரைந்து வந்தது. பாவிகள்! டபடப-என்று சுட ஆரம்பித்தார்கள். அந்தக் குண்டுகளில் ஒன்று வாலிபர்களின் துணைத் தலைவனைக் கொன்றுவிட்டது. சாவேஜ் அவன் பெயர். திட்டம் வகுப்பதில நிபுணன். குண்டடியைத் தாங்கிக்கொண்டு தலைவன் அருகில் ஓடினான். அவன் காலடியில் விழுந்தான். "**நண்பா என் காரியம் முடிந்தது. போராட்டத்தை நடத்து**" என்று கடைசி மூச்சில கூறிவிட்டுக் கண்களை மூடிவிட்டான். தலைவன் திணறினான். எதிரிலே எதிரிகள். காலடியிலே நண்பனின் பிணம்! இளஞ்சிங்கம், சற்று முன்புதான் அயர்லாந்தின் விடுதலைக்கான திட்டங்களை மிக விரைவில் நீட்ட

தென்னரசு

வேண்டுமென்றான். அவன் ரத்தத்தில் ஊறிக் கிடக்கிறான். தலைவனின் கண்கள் கலங்கின. ஆனால் அவர்களுக்கு ஒரு திருப்தி! வைஸ்ராயைக்கொன்றுவிட்டோம் என்று. வைஸ்ராயின் மோட்டாரை ஓட்டிச் சென்ற டிரைவர் வாலிபர்களால் சுடப்பட்டான். மோட்டார் பீனிக்ஸ் தோட்டத்து வாயிற கதவில் மோதிச் சிதறுண்டது. அதிலுள்ளவர்கள் அலக்காகத் தூக்கி எறியப்பட்டனர்.

போலீஸ் படையினரிடம் தோட்டாக்கள் தீர்ந்துவிட்டன.

— 10ம் பக்கம் —

> "போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்ருல்
> எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன் : அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 4 ‖ 14—12—57 ‖ இதழ் 24

பண்டிதர் இருவர்!

பண்டித ஜவகர்லால் நேரு அவர்களின் சென்னை வருகை மிகச் சிறப்பாக இருக்கும், மக்கள் கைகூப்பி வணங்கி வரவேற்பர், புரட்சியால், கொந்தளிப்பால் பழுப்பேறி இருக்கும் சென்னை சாந்தமுறும்-என்று எண்ணியவர்களெல்லாம், நேருவை வரவழைப்பதற்குக் காரணமாக இருந்தவர்களெல்லாம் வெட்கமும் துக்கமும் அடையும் வகையில் நேருப் பண்டிதரின் தமிழ் நாட்டுப் பவனி காகித வெடியாகிவிட்டது. சென்னை மவுண்ட்ரோடில் நேரு வருகிருரென்ருல்,-அந்நியரை வென்று, அவர்தம் படைகளை அடிமைப்படுத்தி வெற்றி வீரராகத் திரும்பிவரும் அரசர்களுக்கு காட்டப்படும் மரியாதையையும், மகிழ்ச்சி ஆரவாரத்தையும் இருமருங்கும் குழுமியிருக்கும் மக்கள் காட்டுவர், அது ஒரு காலத்தில்! அந்தக் காலம் மலையேறிவிட்டதென நேருவே உணரும் வகையில் அவரது சென்ற வாரப் பவனி நிரூபித்துக் காட்டிவிட்டது.

மாலை 4 மணி அளவில், கிண்டி ராஜபவனத்திலிருந்து அவர் அழைத்து வரப்பட்டார். போலீஸ்காரர்களைத் தவிர, போய் வந்து கொண்டிருந்த மக்களைத் தவிர தனிச் சிறப்பு வேறெதுவும் இல்லை. நேருவைப் பார்க்க வந்திருக்கிருேம், என்று யாரும் சொல்லிக்கொண்டு மவுண்ட்ரோடுக்கு வரவில்லை. அதோ போகிருர், இதோ போகிருர்-என்று தான் சொன்னுர்களே தவிர 'எப்போ வருகிருர் ?' என்று எவரும் கேட்கவில்லை. சர்வாதிகாரி என்றழைக்கப்பட்ட - தூற்றப்பட்ட ஸ்டாலின் காலத்தில் கூட அவருக்கு எதிரே யாரும் எதுவும் செய்யவில்லை. ஆனுல் நேருவின் காலத்தில் நேருவுக்குச் செல்வாக்குக் குறைந்துவிட்டதை நேருவே கண்டார். அதனுல் கோபங் கொண்டார்.

பண்டிதநேரு சென்னைக்கு ஏன் வந்தார் ? திடீரென்று அவசியம் என்ன வந்தது ? யாரோ எங்கோ ஏற்பாடு செய்த சாப்பாட்டையும், இன்ப நிகழ்ச்சிகளையும் அனுபவிக்க வந்தவர், வழியில் சென்னையில் இறங்கினுர். எதை எதையோ எண்ணி இறங்கிய அவர் ஏமாந்தார்; ஏற்றங்கொண்டிருக்கும் ஒரு இனத்தின் தலைவர்மீது பாய்ந்தார். நாகரீகத்திலும் பண்பாட்டிலும் மேம்பட்டு விளங்கும் தமிழகம், தன்னுடைய பிறவிக்குணத்தைக் காட்டியது அமைதியாக இருந்தது.

காட்டுமிராண்டிகள், பைத்தியக்காரர்கள், துரோகிகள்-பெரியாருக்குப் பண்டிதர் சூட்டிய பட்டங்கள். இந்தப் பட்டங்களை பண்டிதர் ஏன் கொடுத்தார் ?

சட்டப் புத்தகத்தைப் பெரியார் எரித்தார் என்பதற்காகக் கொடுத்தார்

சட்டப் புத்தகத்தைப் பெரியார் ஏன் எரித்தார் ? இங்கேதான் பண்டிதர் நிதானம் இழந்தார்.

★

அதே பண்டிதர் திருச்சி போனுர். வழியிலே கா. சீ. க. வினர் கருப்புக் கொடி காண்பித்தார்கள். 'முதுகுளத்தூர் கலவரத்தில் இவர்கள் ஒரு சாரார்' என்று .நேருவுக்குப் பக்கத்திலே இருந்தவர்கள் சொன்னுர்களோ என்னவோ, உடனே நேரு 'ஜாதி ஒழியவேண்டும்' என்று கர்ஜித்தார்.

தமிழகம் இரண்டு பண்டிதர்களைச் சந்தித்தது. திருச்சிக்கு வந்த பண்டிதர், ஜாதி ஒழிய வேண்டுமென்ருர்; அங்கே பண்டிதர் பெரியார் கட்சியிலே நின்று பேசினுர். அதே பண்டிதர் சென்னையில் பேசும்போது எந்த 'ஜாதிச் சனி'யனை அவர் ஒழிக்க ஆசைப்படுகிருரோ அதே 'ஜாதிச்சனி'யனை ஒழிக்க எண்ணிய பெரியாரைக் காட்டுமிராண்டிகள், பைத்தியக்காரர்கள் என்ருர்-இரண்டு பண்டிதர்கள்! ஒருவர் பெரியாரின் பண்டிதர்; மற்ருெருவர் சிறியார்களின் பண்டிதர்!

செயற்கைச் சந்திரன் பிரச்சினையிலிருந்து செல்லரித்துபோன சாஸ்திர சம்பிரதாயப் பிரச்சினை வரை-அத்தனையிலும் தலையிட்டுப் பேசும் பண்டிதர், தமிழ்நாட்டுக் கொந்தளிப்பைச் சாந்தப்படுத்தவோ, வழிவகை சொல்லவோ முயலவில்லை. பிரதி வாதிகள் அனைவருமே குற்றவாளிகள் என்ற கண்ணேட்டத்தில் அவர் பேச்சு அமைகிறது. பண்டித நேரு அவர்கள், அவரை உலகம் மதிக்கின்ற அளவுக்கு சென்னையிலும் நடந்துகொள்ள எண்ணியிருந்தால் எப்படிப் பேசி இருக்கவேண்டும் ?

வடநாட்டுக் கக்கன் !

அணிமையில் தமிழகத்திற்கு வந்த நேருப்பண்டிதர் அவர்கள், தலைவர் பெரியார் நடத்திய கிளர்ச்சிகளைக் கண்டித்துப் பேசுகையில் 'காட்டுமிராண்டிகள்', 'பைத்தியக்காரர்கள்' என்று பேசிவிட்டுப் போயிருக்கிருர். தமிழ்நாட்டு மந்திரி கக்கனும், 'காட்டுமிராண்டிகள் – பைத்தியக்காரர்கள்' என்றுதான் சொல்லுகிருர். நேரு என்ன புதிதாகச் சொன்னுர் ?

ANAND

"ஜாதியை ஒழிக்கும் வேலையில், திராவிடக் கழகத்தைச் காட்டி எனக்கு அக்கரை உண்டு; அதற்கு இதுவல்ல வழி! எல்லாக் கட்சிக்க களும் கூடிப் பேசுவோம்; ஒரு முடிவுக்கு வருவோம்'-என்று பேசியிருந்தா உலகம் அவருக்குக் காட்டும் மரியாதைக்கு-அணிவிக்கும் புகழ்மாலை பொருளுண்டு. ஆனுல் பண்டிதர் அவர்கள், எதற்காகப் பெரியார் சட் புத்தகத்தை எரிக்கிருர் என்பதையே புரிந்துகொண்டு பேசவில்லை.

அரசியலில், வலுவுள்ளவர்கள் எதையும் பொருட்படுத்துவதில்லை. வீனர்கள் தான் அரணை வாலைப்போல் துடிப்பார்கள். ஆனுல் இந்த துணைக்கண்டத்தில், பலமான கட்சியைச் சேர்ந்த பண்டிதர் குதிக்கி உலகம் இதை விந்தையோடு பார்க்கிறது.

★

பண்டித ஜவகர்லால்நேரு அவர்கள் இன்னெரு பெருந்தவறைச் செ விட்டுப் போயிருக்கிருர். பெரியார்மீது வழக்கு இருக்கிறது; அவர் கு வாளியா நிரபராதியா என்று நீதிமன்றம் இன்னும் தீர்ப்புக் கூறவில்லை. அ குள்ளாகப் பெரியாரைப் பைத்தியக்காரர் என்பதும் காட்டுமிரான் என்பதும், துரோகி என்பதும், ஜவகர்லால்நேரு, நீதியையும், சட்டத்தை மதிக்கவில்லை என்பதோடு, தான் என்னும் அகந்தையில் பேசுபவர் என்ப யும் எடுத்துக்காட்டுகிறது.

தமிழ்ப் பெருமக்கள் ஆராய்ந்து பார்க்கவேண்டும், யார் குற்றவா பெரியாரா ? நேருப் பண்டிதரா ?

பெரியார் சட்டப் புத்தகத்தை எரிப்பது குற்றமானுல், அதே சட்டத் யும், நீதியையும் அவமதிப்பது மட்டும் குற்றமில்லையா ?

பண்டிதர், ஜாதி ஒழிக்க வேண்டும் என்று சட்டமியற்றிவிட்டு, அதன் நடவாதது-ஒரு குற்றம்.

நீதியின் முன்னே நிறுத்தப்பட்டிருக்கும் பெரியாரை இகழ்ந்தது- குற்றம்.

தான் உருவாக்கிய சட்டங்களையே அவமதித்து நடந்தது-ஒரு குற்

இத்தனை குற்றங்களுக்கு ஆளான நேரு அவர்கள் தமிழர்களைப் பழி என்ருல்...அதைக் கேட்டுக்கொண்டிருக்க எவ்வளவு பண்பு வேண்டு இதை யார் உணர்ந்தார்கள் ? இதை அறிஞர் அண்ணு அவர்கள் மி தெளிவாகச் சொன்னுர்கள். 'நாம்தான் நேருவைப் பெரியவர் என்று க கிருேம். ஆனுல் அவர் இங்கே இருக்கும் கக்கனைப்போல்தான் பேசுகிரு என்று.

மொத்தத்தில், தமிழகம் நேருவுக்கு உணர்த்த இருந்த அதிருப்தி எந்தக் கட்சியின் திட்டமும், முன்னேற்பாடுமில்லாமல் அவருக்கு உண விட்டது. ஒரு நாடு அந்த நிலைக்கு வந்துவிட்டால் விடுதலைப் போராட் திற்கு அது தயாராகிவிட்டது என்று பொருள். தமிழகம் போர்க்கோ பூண்டுவிட்டது.

பண்டிதர் திராவிடர்களை எல்லாம் மூட்டை முடிச்சுகளைக் கட் கொண்டு போகச் சொல்லிவிட்டார். ஆனுல் போகப்போவது யார் என்ப சொன்னவர்களுக்கு உணர்த்தும் காலம் வந்துவிட்டது. நாளும் கிழமை மனக்கண்ணில் தோன்றி மறைகின்றன. மக்கள் சக்தி தலைவர்களின் க களை நோக்கியிருக்கிறது.

வெண்பாப் போட்டி-9.

ஈற்றடி :

மனமே உனக்கென்ன வாய் ?

முடிவு தேதி 28-12-57.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை-ட.

தென்றல்

இதுதான் திராவிடநாடு

பன்மொழிப்புலவர்
கா. அப்பாதுரையார், எம். ஏ. எல். டி.

-12-

ஆரியப்பண்பு தமிழகத்திலும் சூழ் நிலங்களிலும் பரவிய அளவில் தான் சென்ற இரண்டாயிர ஆண்டுகளில் கீழ் திசை படிப்படியாகக் கீழ்ப்பட்டு வந்துள்ளது. திராவிட நாடு அமைந்து கீழ் திசையில் ஒரு பகுதியிலேனும் திராவிடப் பண்பு தழைத்துப் பரவ வழி ஏற்பட்டால், கீழ்திசை மேல்திசையுடன் எல்லா வகையிலும் முதலாக வளரும் என்பதில் தடையில்லை. ஏனென்றால் மேல் திசை முன்னேற்றத்துக்கு ஆரியப் பண்பின் அலைகள் அங்கு சென்று எட்டாமையே காரணம்; அதே சமயம் கீழ்திசையின் கிழக்கும் தெற்கும் ஓரளவு முன்னேற்றமடைந்துள்ளதற்கு அங்கே திராவிடப் பண்பு முற்றிலும் அறியாமல் ஓரளவாவது நிலவ இடம் ஏற்பட்டிருப்பதே காரணம் என்றும் காணலாம்.

திராவிட நாடும் தென்கிழக்காசியாவும், ஆசியாவும் நிலவுலகின் இயற்கை மையங்கள். அவை யாவுமே இயல்பான வளங்கள், வளப்பங்கள் உடையவை. இதுமட்டுமோ? அவையே மனித நாகரிக வரலாற்றில் நீண்ட காலம் முதலிடம் பெற்றவை. திராவிட நாடு பிரிவுற்ற ஒரு சில நாட்களில், இந்த இயல்பான, வரலாற்றடிப்படையான வியப்பை ஆசியா மீண்டும் எளிதில் பெற்றுவிடமுடியும். இவ்வளம் திராவிடநாட்டுப் பிரிவினை திராவிடநாட்டின் வருங்கால வளமாகமட்டும் நின்றுவிடாது. அது உடனடியாகத் தென்கிழக்காசியா முழுவதையும் அடுத்தபடியாக ஆசியாவையும் ஆபிரிக்காவையும் ஒருலகில் தமக்குரிய இடம்பெறச் செய்வதாக அமையும்.

திராவிடநாட்டுக்குள்ள இந்த இன வேறுபாடற்ற, இனம் வளர்க்கும் பணியை நாம் வரலாற்றில் பின் சென்று 12-ம் நூற்றுண்டில் காணலாம். அந்நூற்றுண்டு வரை இந்தியாவில் இலக்கியமுடைய மொழிகள் இரண்டே இரண்டு தான் இருந்தன. ஒன்று திராவிடத்தில் தமிழ். மற்றது ஆரிய நாடு என்று அன்று அழைக்கப்பட்ட தேசிய உருவிலாப் பரப்பில் திராவிடப் பண்பாட்டின் தாக்குதலால் புதிதாக எழுந்த செயற்கை இலக்கிய மொழியாகிய சமஸ்கிருதம். முன்னது தென் மொழி என்றும் பின்னது வடமொழி என்றும் அந்நாளில் அழைக்கப்பட்டதன் காரணம் இதுவே. தெற்கு அந்நாளிலேயே ஓர் உயிர்மொழி, தேசிய மொழியை மணமுள்ள மலராகப் பேணிற்று. வடக்கோ உருவிலா, உயிரிலா மொழி, தேசியப் பண்பற்ற மொழியைத்தான் மலராகப் போற்றிற்று! ஆனால் 12-ம் நூற்றுண்டுடன் தென்மொழி, வடமொழி என்ற இந்த வழக்கு பொருளற்ற பழவழக்காக மாறிவிட்டது. சமஸ்கிருதத்தின் இலக்கிய வாழ்வு அந்நூற்றுண்டுடன் கிட்டத்தட்ட மாண்டது. அதே சமயம் 12-ம் நூற்றுண்டு முதல் தென்னாட்டு மொழிகள் நான்கும் இலக்கிய வாழ்வில் புதுமலர்ச்சியுற்றமை விந்தியத்துக்குஅப்பாலும் சிறப்பாக வட இந்தியாவின் தெற்கு, கிழக்கு எல்லையிலுள்ள தாய்மொழிகளில்— 16-ம் நூற்றுண்டில் சிலவும், 18, 19-ம் நூற்றுண்டுகளில் சிலவும் 20 ம் நூற்றுண்டில் சிலவுமாக புதிதாக இலக்கிய வாழ்வும் மொழி வாழ்வும் மலர்ச்சியும் பெற்றன. இம்மலர்ச்சிகளுக்குத் திராவிடப் பண்பாட்டின் உயர் குறிக்கோளில் ஊன்றித் தமிழகத்திலிருந்து எழுந்து வடதிசை நோக்கிப் பரவிய வைணவ இயக்கமே காரணம் என்பதை வரலாறு காட்டுகிறது. தமிழ் நீங்கலாக இந்தியாவின் எல்லா மொழிகளிலுமே இலக்கியங்கள் ஓரளவு இராமாயண பாரதங்களாக, பாகவதங்களாகக் காட்சியளிப்பதன் விளக்கமும் இதுவே.

இந்த வைணவத்தை இன்னும் வடஆரியர் திராவிட சம்பிரதாயம் என்றும் தென்கலை என்றுமே அழைக்கின்றனர் என்பதும், தென்னாட்டில் 16-ம்நூற்றுண்டில் எழுந்த வடகலை, வடநாட்டில் இன்றுவரை பரவவில்லை என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கன.

'ஆரியமாவது திராவிடமாவது' என்ற கூக்குரல் உண்மையிலேயே எழுமானால், இனவேறுபாடு, இன உயர்வு தாழ்வற்ற அத்தகைய நிலை உண்மையில் ஏற்பட்டிருக்குமானால் திராவிடப் பண்பாடு வெற்றிகரமாக வளர்ந்துவிட்டதென்று நாமும் ஒத்துக்கொள்ளலாம். அத்தகைய இன உயர்வு தாழ்வு வேறுபாடற்ற நிலையே திராவிடப் பண்பாட்டு நிலை, திராவிட இயக்கம் போடும் சரிசமநிலை அதுவே. ஆனால் ஆரிய திராவிட இனஎல்லை அழிப்பதால் மட்டும் இது உண்டாவதல்ல. இனஎல்லை யழிந்தபின் நிலவும் பண்பு திராவிடப் பண்பானாலும், இரண்டு இனங்களும் சரிசம அடிப் படையில் இயங்கி ஒருமைப்பட வழி இருக்கலாம். ஆனால் இன்று இன எல்லை அழிக்கப்பட்டதாகக் கூற முடியாது. நேர்மாறாக, ஆரியர் ஒரே ஆரிய இனமாகவும் இல்லை. திராவிடர் ஒரே திராவிட இனமாகவும் இல்லை. ஆரியருக்குள்ளும் பலவகை வேறுபாடுகள், உயர்வு தாழ்வுகள் உள்ளன. திராவிடருக்குள்ளும் அதே நிலைதான். இத்தனை உயர்வு தாழ்வுகளையும், ஐயங்கார், ஐயர், முதலியார், செட்டியார், மறவர், குறவர், தீண்டப்படாதார், அணுகப்படாதார், மலங்குடிகள், காட்டுக்குடிகள் - இத்தனையையும் பொறுத்துக்கொண்டு இவற்றை மாற்ற வளம், மாற்றத்துடிக்கும் திராவிடப் பண்பாடு, திராவிட இலக்கியம், திராவிட இயக்கம் ஆகியவற்றையும் நசுக்க எண்ணும் ஆரியம்தான் இன்று ஆரியமாவது, திராவிடமாவது என்ற பசப்பி, இந்த உயர்வு தாழ்வு வேறுபாடுகளை நிலவரமான கையாக்கப் பார்க்கிறது.

தவிர, இனவேறுபாடு வேறு, இனவாழ்வு வேறு. இனவேறுபாடு பழக்க வழக்கங்களைப் பொறுத்தது. பண்பாட்டைப் பொறுத்தது. ஆனால் இனவாழ்வு என்பது அந்த இனத்தின் உறுப்பினர் தன்னலம் கடந்த பொதுமைப் பாசம், அதற்கு உதவும் இனமரபுகள் பண்புமரபுகள், உயர் இனக்குறிக்கோள்கள் ஆகியவற்றைச் சார்ந்தது. திராவிட நாட்டுக்கு எவ்வளவு இயற்கை வளம் உள்ளதோ, அதே, அளவும் இவ்வகையில் திராவிட இனத்துக்குப் பண்புவளம், மொழிவளம், இலக்கிய வளம் ஆகிய மூன்றும் உலகில் வேறு எந்த இனத்தையும் விட-மேலை இனங்களைவிடக்கூட மிகுதியாக உள்ளன. இனமும் சமயமும் மட்டுமன்றி, காலமும் தேசமும் கடந்த வள்ளுவர் பொது மறைவழி புத்தர், மகாவீரர், இயேசு, நபிகள் நாயகம் ஆகியவர்கள் வழிகளைப்போலத் தனி மனிதர் வழி மட்டும அன்று. அது திராவிட இனத்தில் தோன்றி முளைத்து மலர்ச்சியடைந்த திராவிட இனநெறி. ஏனெனில் அதுவே தொல்காப்பியத்தின் நெறி, சங்க இலக்கியநெறி. அதனைக் குருதியிலே, இனத்தலையூற்றிலே கொண்ட திராவிடஇனம் உலக இனங்களில் தலைசிறந்து விளங்க மட்டுமல்ல, உலக இனங்களுக்கு வழிகாட்டவல்ல, உலக இனங்களையே கைதூக்கிவிட்டு உயர்த்தவல்ல இயல்பான வாய்ப்பு வளம் உடை

யது. ஆனால் வள்ளுவர் பண்
சங்க இலக்கியப் பண்பை வ
கும் வாய்ப்பு, அதனடிப்பன
நாடும் அரசியலும் சட்டமும்
யலமைப்பும் வகுக்கும் உரி
திராவிடருக்கு இன்று இல்
திராவிடநாடு அமையும் கா
லேயே அது ஏற்படமுடியும்.
கத்திலும் தமிழிலக்கியத்திலும்
மூர் சமய வாழ்விலும் கலந்த
யப் பண்பாடு அதை வள
இயங்கவொட்டாமல் நீண்ட கா
தடுத்து வந்துள்ளது. அது போ
மல் பிரிட்டிஷ் ஆட்சியிலும் இன்
அதுவே-அந்த ஆரியப் பண்
முழுதும் ஆட்சியுரிமையும்
உரிமையும் பெற்று தமிழும் தமி
மொழிகளும் அவற்றின் பண்
களும் உரிமையற்ற நிலையில்
வுக்கும்சாவுக்குமிடையில் போர
வேண்டும் நிலையில் இருக்கின்

திராவிட நாட்டுப் பிரிவினை
அடிப்படையாகத் தேசிய
வளர்த்து உலக இனம்
வளர இருக்கும் ஒரு மா
கத்தின் குரல். அது இனம்
இன வேறபாடு வளர்த்து,
தாழ்வும் ஆதிக்கமும் பேண
கில் வேற்றுமைகள் பெருக்
ஆரியரின் இனப் பெயர்
ஆதிக்கக் கிளர்ச்சியன்று.
என்ற சொல்லை ஆரியச் சார்ப
பாரத தேசியச் சார்பாளர்
படுத்தலாம், பயன்படுத்தா
இருக்கலாம். ஆனால் திரா
பயன்படுத்தும் 'இனம்'
சொல்லின் பொருளும் ப
வேறு. அவர்கள் பயன்படு
'இனம்' என்ற சொல், அ
மனதின் சொல்லும் 'இனம்' எ
சொல்லின் பொருளும் ப
வேறு. அவ்வேறுபாடு 'கா
'காதல்' என்ற சொற்களின்
பாடும், 'மாடு', 'பசு' என்ற
களின் வேறுபாடும் போன்
ஆரியர் பயன்படுத்தும் 'இ
என்ற சொல் 'காமம்'
போன்றது. அது சொல்லத் த
கீழ்த்தர உணர்ச்சியுடைய
பண்புடையவர்களிடையேம
பெறமுடியாத சொல். அ
அச்சொல்லை மறைப்பதற்கும்
னமாகப் பயன்படுத்து வ
காரணம் அதுவே. ஆனால் திர
டர் அதே சொல்லை அதன்
பொருளில், நாகரிக வளர்ச்
ரிய ஆக்கப் பொருளில், 'கா
'பசு' என்பவற்றைப்போல,
காது, கூசாது வழங்குகின்றன

மாடு முரட்டுத்தனம் உடை
பசு அமைதியுடையது.
குடும்பம் கெடுப்பது. காதல்
பம் வளர்ப்பது. இதுபோ
ஆரியர் பேணும் 'இனம்',
பண்பு மனித வாழ்வு கெடு
திராவிடர் பேணும் 'இனம்',
பண்பு மனித வாழ்வை வளப்
துவது. தேசிய இனம்,
இனம், உலகம் ஓரினம் என்
கூறும்போது, 'இனம்'
சொல்லைத் திராவிடர் 'இனம்'
பது போன்ற அறிவார்ந்த,
பொருளிலேயே வழங்குகின்

- தொடரும் -

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுக் கூட்டம்

29-12-57 ஞாயிறு அன்று நாகர்கோயிலில் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழுக் கூட்டம் நடைபெறும்.

தலைமைக் கழகம் (தி. மு. க.)

அத்திப் பழம்

- 6 -

தா தன் சொல்லைத் தட்டித்
வுருன வழியில் செல்லுவது
ல் நினைத்தார். அதனுல்
மகனுடைய குரலைக்
ம் அவனைக் காண வேண்
ன்ற வேட்கையும், இல்
ஆந்தச் சாய்வு நாற்காலி
ய்ந்து கிடந்தார்.

ன இன்று திடும் என
ருக்கின்ருன்? இன்று புதன்
மைதானே, நாளை மறுநாள்
ண்டு நாட்களும் கல்லூரி
க்குமே இவன் ஏன் இன்று
ருக்கின்ருன்? ஒருகால்
றை விட்டிருக்கின்ருர்
ா-ஊம் பொறுத்துப் பார்க்க
' என்று பலவாறு
ணிக் கிடந்தார்.

ளே, தாயும் மகனும் பேசிக்
ண்டது அவ்வப்போது
லை விழுந்துகொண்டிருந்
.

ன்னடா அப்பா இப்படி
ைத்துப்போனுயே."

ான் ஒன்றும் இளைக்கவில்லை'
நன்ருகத்தான் இருக்கின்
ன்."

என்னடா அப்பா நன்ருக
க்கிருய்? கண்களில் இருக்
குழியைப் பார்."

நீ தான்மா, இப்படிச்சொல்லு
ருய். எடைபோடும் மிஷின்,
முன்னே இருந்த எடையை
ர் காட்டுகின்றது. குறை
க் காட்டவில்லை."

ஆமாம். உனக்கு நிரம்ப
யும், நீ பெரிய படிப்பு படிக்
ருய். எடைபோடும் மிஷி
கு என்ன தெரியும். என்
கள் எனக்குச் சொல்லுகின்
வே."

என்று தன் மகனின் உடல் வளர்ச்சி ஆராய்ச்சியில் சிவகாமி அம்மாளின் கவனம் இருந்தது.

"ஆமாம், நீ ஏன் இத்தனை நாள் வரவில்லை?"

"எவ்வளவோ வேலை 'மா' இப்படி அப்படி நகர முடிவதில்லை" என்று ஞானசம்பந்தன் சொன்ஞன்.

'ஆமாம் அங்கே வெட்டிமுறிக்கின்ருன் பிள்ளையாண்டான்' என்று தாழ்வாரத்தில் பெரியசாமியின் மனம் எண்ணிக் கொண்டது.

"இல்லை, மா. நாளை காலையே புறப்பட்டால்தான் நல்லது."

"இந்த விரைவில் ஏன் வந்தாய் பின்? இரண்டுநாள் இருந்துபோவதுபோல வருவதுதானே?"

இதுவரையில்தான் பெரியசாமியின் காதுகளில் விழுந்தன. அதற்குப் பிறகு தாயும் மகனும் என்னவோ 'குசுகுசு'வென மெள்ளப் பேசிக்கொண்டனர். என்ன பேசிடுகின்றனர் என்று அறியாமல் பெரியசாமி சாய்ந்து கிடந்தார்.

"சரி இப்போதாவது வந்தாயே அதைச் சொல்லு. இன்னும் இரண்டு நாட்களுக்கு இருப்பாய் அல்லவா? விடுமுறைதானே இப்போது?" என்று சிவகாமி அம்மாள் கேட்டாள்.

"நான்கூட அப்படி இரண்டு மூன்று நாட்கள் இருந்துவிட்டுப் போகலாம் என்றுதான் மா நினைத்தேன். ஆனுல் நாளைக்கே போகவேண்டும். முக்கியமாகப் போகவேண்டும்."

"ஒரு நாள் இருந்து போகலாமே" என்ருள் சிவகாமி அம்மாள்.

மா. கி. தசரதன் எம். ஏ.

சற்று நேரத்தில் வாயையும் கையையும் துடைத்தவாறு ஞானசம்பந்தன் வெளியில் வந்தான். அங்கே தந்தையைச் சற்றும் எதிர்பாராதவன்போல் அவரைக் கண்டதும் துணுக்குற்று ஒரு நொடி நின்ருன். பிறகு மெல்ல தரையையே பார்த்துக்கொண்டு தெருப்பக்கமாகப் போகத் தலைப்பட்டான்.

நம்மைக் கண்டிக்கின்றவர்கள், ஏன் அப்படி நடந்தாய் என்று உரிமையோடு கேட்கின்றவர்கள் இல்லாத நேரத்தில் நாம் ஏதாவது செய்திடுகின்ரேம். அது நன்மையா திமையா என்று எண்ணிப் பார்ப்பதில்லை. செய்யக் கூடாததாக இருந்தால் "ஊம் பார்த்துக்கொள்ளலாம்!" என்று துணிந்து செய்திடுகின்ரேம். அந்தச் செயல் முடிந்த பின்னர் யாரைக் கண்டு அஞ்சுவோமோ அவரைக் கண்டதும் நம்மையறியாமலே நம்முடைய நெஞ்சம் துணுக்குறுகின்றது. என்ன செய்தோம் என்று இரங்குகின்றது. ஏன் செய்தோம் என்று வருந்துகின்றது. என்ன சொல்லுவார்களோ என்று அஞ்சுகின்றது.

இப்படிப்பட்ட நிலை இருந்தால் அதை ஒருவகையில் நல்லது பாராட்ட வேண்டும். இன்னும் அந்த மனதில் சீர்பெறும் வழி இருக்கிறது என்று நம்ப வேண்டும். திருந்த இடம் இருக்கிறது என்று துணிவு கொள்ள வேண்டும். மனம் இன்னும் அங்கே மரத்துப்போகவில்லை, அதனுல் மனச்சான்றும் மடிந்து போகவில்லை என்று எண்ணி மகிழவேண்டும். ஏனென்ருல் ஒரு மனிதனுக்கு உள்ளம் நல்ல நிலையில் இருக்கும் நிலை இருந்தால் போதும். எப்படியும் அவன் நன்மை பெறமுடியும். உள்ளம் என்பது என்ன? உடலிலே எங்காவது இருந்து வளரும் உறுப்பா? இல்லை. இது வழி என்று காட்டிடும் நற்ருெண்டன். அந்த உள்ளம் நல்ல நிலையில் இருக்குமானுல் என்றும் நம்பிக்கை இருக்கும்.

'ஆமாம். அப்படித்தான் செய்வேன் என்ன அதற்கு இப்போது?' என்று எதிர்க்கும் துணிவு - கட்டம் வந்துவிட்டால்... அதற்குப் பின்னர் அந்த மனதில் எதுவும் எளிதில் இடம் பெருது. ஆனுல் 'என்ன சொல்லிடுவரோ' என்று ஏங்கிடும் நிலை இருப்பின் என்றைக்கும் அது வளைந்து கொடுக்கும், வாழ வழிகோலிக் கொள்ளும்.

நல்ல உள்ளத்தில் சாகாமல் இருக்கும் சான்று-மனச்சான்று, தயாரித்து வைத்திருக்கும் மாவு போன்றது - விட்டு வைத்திருக்

கும் நாற்றுபோன்றது. குழைத்து வைத்த மாவு எப்போதும் பணியாரம் செய்துகொள்ள ஏற்றது. விட்டுவைத்த நாற்றும் வேண்டிய போது விளை நிலத்தில் எடுத்து ஊன்றிப் பயிர் வளர்க்கலாம். ஆனால் இந்த இரண்டும்கூட நெடுநாட்களுக்கு நின்று நிலைப்பதில்லை என்று உணரவேண்டும். குழைத்த மாவும், விட்ட நாற்றும் பதம் கெடுவதற்கு முன்னே பக்குவமாக எடுத்துப் பயன்படுத்திடவேண்டியவை. இல்லையெனில் பாழ்பட்டுப்போகும். பிறகு பணியாரமும் ஆகாது; பயிரும் செழிக்காது.

அதைப்போலத்தான் நல்ல மனம் என்பதும். பக்குவமாக இருக்கும்போது, மனச்சான்று மரத்துப்போகாதபோது அது பயன்படுத்தத் தக்கது.

ஞானசம்பந்தன் இன்னும் அந்த நிலையில்தான். படிக்கப் போனவன் பாழான நெறியில் எப்படியெப்படியோ அலைந்தான், திரிந்தான்.

தாயும் தந்தையும் தன் கண் எதிரில் இல்லாதபோது தான் தோன்றித்தனமாக ஆடினான். இப்போது தாயைக் கண்டபோது அந்த மென்மையான மனதைக் குழைந்துவிட்டான். பிள்ளைப்பாசம் பெற்ற வயிற்றை குளிரச் செய்துவிட்டது!

ஆனால் பெரியசாமியை அப்படி ஏமாற்றிடமுடியும் என்று அவன் நம்பவில்லை. அதனால்தான் தெருத் தாழ்வாரத்தில் தன் தந்தையைக் கண்டதும் சற்று நேரம் திகைத்தான். பின் அமைதியாக மெல்ல அடியிட்டு நடந்தான்.

"மாலைதான் வந்தாயா?" வெளியில் போவதுபோல் தயங்கிக்கொண்டிருந்த தன் மகனைப் பார்த்துப் பெரியசாமி கேட்டார்.

"ஆமாம்"

"இத்தனை காலமாக ஏன் வரவில்லை?"

"..........."



"சரி சரி போ..." என்று வழக்கை விசாரித்துத் தீர்ப்பு சொல்லும் நடுவணரைப் போல பெரியசாமி விடை கொடுத்து அனுப்பி விட்டார்.

ஞானசம்பந்தனுக்கு அது பெரிய ஏமாற்றமாக இருந்தது. 'ஏன் இத்தனை காலமாக வரவில்லை என்று கேட்டு ஏதாவது திட்டுவார் என்று அவன் எதிர்பார்த்தான்.' என்ன இப்படி வீண் செலவு செய்திடுகின்றாய்? என்று வினவுவார் என்று எண்ணிக்கொண்டு இருந்தான். இதைக் கேட்டால் இதைச் சொல்ல வேண்டும், இன்னது சொன்னால் இன்னது கேட்பார் என்று அவன் ஏதேதோ கற்பனை செய்துகொண்டு பல பொய்க் காரணங்களைத் தன் மனத்தில் எழுதி வைத்துக் கொண்டிருந்தான்.

முன்னே ஒரு முறை இப்படிச் செய்து பழக்கப்பட்டவன் அவன் ரூபாய் அனுப்புங்கள் என்று எழுதியபோது 'அனுப்பியதற்குச் செலவு எழுதி அனுப்பு' என்று பெரியசாமி கட்டளை பிறப்பித்ததும், தன் தந்தைக்குக் கல்லூரியைப்பற்றி ஒன்றும் தெரியாது என்ற துணிவில்,

கேசினோ எழுதிய டான்ஜுவான் 5-0-0

மினர்வா எழுதிய டார்ஜான் 7-8-0

ராக்சி எழுதிய யூ அண்ட் ஐ 4-12-0

—என்று இவன் பார்த்த சினிமாக்களைப் புத்தகங்களாகவும், அந்தச் சினிமா காட்டிய கொட்டகைகளை அந்தப் புத்தகங்கள் எழுதிய ஆசிரியர்களாகவும் திரித்து எழுதி அனுப்பினான். இதை ஒன்றும் அறியாத பெரியசாமி, மகன் எழுதியது உண்மை தானே என்று நம்பி "கல்லூரி என்றால் என்ன செலவு என்ன செலவு; புத்தகங்களுக்கே எவ்வளவு செலவு என்று முணுமுணுத்துக்கொண்டிருந்தார்.

இப்படி ஒருமுறை வல்லமையோடு தன் தந்தையை ஏமாற்றிப் பழகியவன் ஆதலால் என்னென்ன கேட்பார் என்னென்ன சொல்லலாம் என்று கோட்டை கட்டிக்கொண்டிருந்தான். ஆனால் பெரியசாமியோ எதையும் கேட்கும் நிலையில் இல்லை. இனி அவன் வழியே விட்டுப் பிடிக்க வேண்டும் என்று எண்ணி 'எப்போது வந்தாய்? சரி சரி போ' என்பதோடு விட்டு விட்டார்.

அதுவும் ஞானசம்பந்தனுக்குப் பெரிய அதிர்ச்சியாகத்தான் இருந்தது. புலி பதுங்குவது பாய்வதற்குத்தான் என்பார்களே என்று எண்ணிக் கலங்கினான்.

"என்ன ஞானசம்பந்தா எப்போது வந்தாய்? என்ன மாதூர் என்று ஒரு ஊர் இருப்பதை நினைவில் வைத்திருக்கிறாய் அல்லவா?" என்று கேட்டுக்கொண்டே எழிலன் வந்தான்.

"வா போகலாம் பள்ளிக்கூடத்து திண்ணைக்கு" என்று அவனைக் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு வெளியே போனான்.

பெரியசாமி "சிவகாமி" என்று அழைத்தவாறு வீட்டின் உள்ளே நோக்கினார்.

தொடரும்

சந்தாதாரர்கள் கவனிக்கவும்

இந்த ஆண்டு "தென்றல்" பொங்கல் மலர் சிறப்பாக வெளிவர இருக்கிறது.

மலர் தேவையுள்ளோர் முன் கூட்டியே ரு 2 அனுப்பிவிட வேண்டும்.

மலருக்குப் பணம் அனுப்பும் பொழுது உங்கள் சந்தா எண்ணைக் குறிப்பிட மறவாதீர்கள்.

நிர்வாகி
"தென்றல்"

நாஞ்சில் மாவட்டத் தி. மு. க. மாநாடு

நாகர்கோவிலில் கலைவாணர் பந்தலில்

டிசம்பர் 27-28 (வெள்ளி, சனி) ஆகிய நாட்களில் நடைபெறும்.

தலைவர்: ஈ. வி. கே. சம்பத், எம். பி.

திறப்பாளர்: டாக்டர். எஸ். அருணசலம், எம். பி., பி. எஸ்.

அறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன்

மற்றும் கழகச் சொற்பொழிவாளர்கள் கலந்துகொள்வார்கள். இரண்டு நாட்களிலும் நாடகங்கள் உண்டு.

கி. மனோகரன், வரவேற்புக்குழுத் தலைவர்.

— கலைக்குமார், அமைப்பாளர், விளம்பரக்குழு.

கேள்விப் பெட்டி

பன்மொழிப்புலவர் பதில் தருகிறார்

ர். எஸ். பிரகாசம்,
பரமக்குடி.

1. 'கண்ணீரும் கம்பலையும்' 'வலை வெட்டி' என்று வரும் ...ற்றொடரில், கம்பலை என்ப ...தும் வெட்டி என்பதற்கும் ...ருள் யாது ?

2. முல்லைக்கு தேர் ஈந்தபாரி, ...லுக்கு போர்வை தந்த ...கன், இவர்களின் வள்ளல் ...மை பாராட்டும்படியாக ...ருந்தாலும் இதுபோன்றசெயல் ...ள் அறிவுக்குப் பொருத்தமற்ற ...வை, தெரியவில்லையே! இதைப் ...ற்றி உங்கள் கருத்து யாது ?

...ண்ணீரும் கம்பலையும்', 'வேலை ...ட்டி' இத்தகைய அடுக்குத் ...டர்கள் தென்னக மொழிகளில் ...தி. வடஇந்தியாவில் அணிமை ...ரை இலட்சியச் சாயல்படாமல் ...களிடையே நிலவிவரும் இந்தி, ...ராத்திபோன்றமொழிகளில்கூட ...இரட்டைக் கிளவி (அடுக்கு ...மொழி)கள் மிகுதி. சமஸ்கிருதத் ...க்கு இயல்பல்லாத இப்பண்பை ...ம்மொழிகளின் அறிஞர்கள் ...ந்தியாவின் அடிப்படைத் திரா ...ட்டப் பண்பின் சின்னங்களுள் ...று என்றே குறிக்கின்றனர்.

...பொருளற்ற நிலையிலேயே புலி-...லி, புத்தகம் - கித்தகம் என்ற ...டுக்குகள்கூடத் திராவிட மொழி ...ன் தனிச் சின்னங்கள் என்று ...றுமளவுக்கு எல்லாத் தென்னக ...மாழிகளிலும் வடஇந்தியப் பண் ...ாத் திராவிட மொழிகளிலும் ...காணப்படுகின்றன என்று மொழி ...றிஞர் எடுத்துக்காட்டியுள்ளனர்.

...வற்றைப் பின்பற்றி திராவிட ...ழியாராய்ச்சியில் ஒரு புதிய ...ன்சயில் புதிய உண்மைகளே ...த ...டக்கூடும். ஆனால் இந்தியா ... தேசமாய் இருக்கும்வரை ...ாதன்னகத் தாய்மொழிகளிலோ ...டஇந்திய மொழிகளிலோகூட ...ண்மையான மொழியாராய்ச்சி ...தாடங்கவே முடியாது. தென்னக ...மொழிகளில் மட்டுமல்ல, தாய் ...மொழிகளிலேயே நம்பிக்கையற்ற ...அயலுலக தேசியமாக, குருட்டு ...ட ஏகாதிபத்தியமாக, இந்தியா ...ன்று இயங்கிப் பல்கலைக்கழகம், ...த்திரிகைகள், வானொலிகள், ஆகிய ...வற்றையும் இயங்கிவருகிறது.

வருங்கால ஆராய்ச்சிக்கு-மாணவ ...மாணவியர் சிந்தனைக்கு இதனை, ...ற்றிலும் விட்டுவிடாமல் இன் ...றைய நம் எளியளவில் இவற்றுக்கு ...விளக்கம்கூற முன் வருவோம்.

புலி-கிலி போன்ற அடுக்கில் ...பின் இணை எதிரொலி போன்றது. அதன் முதல் எழுத்து உயிர் மெய் ...ாகக் 'கி' என்று எழுதப்பட்டாலும் ...யிரும் மெய்யுமற்ற ஒரு மூல ...முதல் ஒலி, இன்றைய குற்றியலு ...ன் தொடர்புடையது - திரா விட மொழியின் தொடக்கக் காலத்தில் சொல் தொடக்கத்தில் மிகுதி இடம்பெற்ற ஒரு மூல முதல் ஒலி என்று கருதத்தகும். எல்லாச் சொற்களுக்கும் மூலமுதல் இவர்ச் சொல்லின் கூறாய் இருந்து, சொற்கள் தனித்தனி உருவம் பெற்ற பின்னும் எதிரொலியாய் சொல் சுட்டும் பொருள் விருத்திருக்கக் கூடும் என்னலாம்.

இந்த எதிரொலி அடுக்குகளின் பண்பே, சிறிது பொருள் வேறு பாடும் பெரிது பொருள் ஒற்றுமையுடன் உடைய சொற்களின் இணைப்பான இரட்டைக் கிளவிகளுக்கும் வழி வகுத்திருக்கவேண்டும்.

கண்ணீரும் கம்பலையும், வேலை வெட்டி-என்பவற்றில் பின்மொழிகள் முன்மொழிகளின் முழு ஒலி எதிரொலியல்ல. அவை பொருள் எதிரொலிகள் போன்றவை. ஆயினும் ஒலி எதிரொலியின் கூறாக அவற்றிலும் மோனை பெரும்பாலும், சில சமயம் எதுகையும் இடம் பெறுவதுண்டு. தமிழில் கனவு-நனவு, தயா-லயா, வளர்ச்சி தளர்ச்சி என எதிர் சொற்கள் மோனை எதிரொலியாகவோ, எதுகை எதிரொலியாகவோ, அமைவது காணலாம்.

மேலே கூறியவற்ருல், கம்பலை கண்ணீருக்கு மோனை மட்டுமல்ல, ஒலி எதிரொலி போன்ற பொருள் எதிரொலியாதலால், 'கண்ணீர்' என்ற சொல்லின் பொருளுடன் இயைந்த பொருளுடையதாயிருத்தல் வேண்டும் என்று காணலாம். இதுபோலவேதான் 'வெட்டி' வேலை என்பதற்கு மோனை மட்டுமல்ல, எதிரொலி மட்டுமல்ல, பொருளியையும் உடைய பொருள் எதிரொலியாதல் வேண்டும் என்று உய்த்துணரலாம்.

'கம்பலை' தனியாய் வரும்போது கூட்டு ஒலி, பல ஒலிகள் இயைந்த ஆரவாரம் என்றும் பொருளுடையது. அரவம், சும்மை, அமலை ஆரிய சொற்களுடன் இயைந்து கம்பர், அதிவீராம பாண்டியர் இதனை அடிக்கடி கையாள்கிருர். பல வகையான வெடிகளை இணைத்த தூணையே இன்றும் விழாக்களில் 'கம்பம்' 'கம்பவெடி' ஏந்துகிறது. பல்வகை அழகு பல்வகை வண்ணக் காட்சிகள் மதுரை மாவட்ட பகுதிஇன்னும்கம்பம் பள்ளத்தாக்கு என்று அழைக்கப்படுகிறது. பாக்கள் இயற்றியதனுலேயே 'கம்பன்' அவ்வாறு பெயர் பெற்ருனே என்றுகூட ஐயுறலாம். நாகர்கோயிலின் பகுதியாகிய கோட்டாற்றில் சில நூற்ருண்டுகட்குமுன் பல நாட்டு வணிகர்கள் நிரை நிரையாக அமர்ந்து வாணிகம் செய்ததனுல், அந்நகரின் பழய கடைத்தெரு 'கம்பளம்' என்று அழைக்கப்பட்டது. குறிக்கும் நெடும் பல்வண்ணக் கட்டங்கள் கொண்ட விரிப்புக் கம்பளம் எனப்படுகிறது. தமிழகத்தில் குடியேறிய பல்வகைப்பட்ட நாடோடி மக்கள் கம்பளத்தார் என்று அழைக்கப்பட்டனர். 'கம்பலை என்ற சொல் உணர்ச்சிக் குழப்பம் என்ற பொருளைத் தருவது என்பதை எளிதில் காணலாமானுலும், இச் சொற்றொடர்புகள் இதனைத் தெளிவுபடுத்தவும் மனத்திலிறுத்தவும் உதவுகின்றன.

'வேலை வெட்டி' கிடையாதா உனக்கு? என்பது பெண்டிர்பேச்சு மரபு, கணவனிடமிருந்து பிரிந்து வாழ்பவளை 'வாழாவெட்டி' என்பர். பயனற்ற பேச்சை 'வெட்டிப் பேச்சு' என்கிருேம். பயனில்லா வேலை செய்பவனை அல்லது வீம்புக்காரனை உவமப் பொருளும் சொற்பொருளும் பொருந்த 'வெண்ணெய் வெட்டி' என்கிருேம்.

பயனில்லாது எதையேனும்குறித்தறிக்கும் செயலை முதலில் குறித்து, 'சிறுபயன்', 'வீண் முயற்சி' என்ற பொருள்களைத் தரும் சொல்லாக 'வெட்டி' இருத்தல் கூடும்.

அகர வரிசை எழுதுபவர்கள்-தொடுப்பவர்கள்-இத்தகைய இரட்டைக் கிளவிகளைக் கேள்வி கேட்ட அன்பர்போலத் தேடித் தொடுத்தல் இத்துறையில் பெரும் பயன் தரும். இத்தகைய உயிராராய்ச்சிகளில் ஊதியமும் செலவும் நாட்டமாகவுடைய நம் சென்னை அண்ணுமலைப் பல்கலைக் கழகங்களோ, சொல் தொடுப்பு நிலையங்களோ களஞ்சியக் குழுக்களோ அவற்றின் திசையில் ஒதுங்கியவர்களோ என்றும் செய்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. ஆனால் தமிழகப் பொது மக்களிடையிலிருந்தும் புலவரிடையிருந்தும் மாணவருலகில் பரந்து வரும் மறு மலர்ச்சித் தமிழார்வம் இத்தகைய முயற்சிகளில் புதியதொரு தமிழ்ச் செல்வர் மரபை, ஆட்சி மரபை இயக்கல் வேண்டும்.

தமிழகத்தில் இத்துறையில் முதல் முயற்சி பல்லாயிர ஆண்டுகளுக்கு முன் தொல்காப்பியரால் அவர் தனி யறிவின் அளவுக்குத் தொடங்கப்பட்டுள்ளது. அவர் உரியியலும் இடையியலும் இலக்கணமல்ல, மொழியாராய்ச்சிப் பகுதிகள் என்பதை இன்றைய புலவரும் மாணவரும் கவனிப்பதில்லை. தொல்காப்பியர் விட்ட இடத்திலிருந்து மொழி நூலைத் தமிழர் வளர்த்து வேரில்லா மேலையுலக அறிவுக் கொடிகளாகிய மொழி நூல், இயல் நூல்களுக்கு உயிர் தரும் நாள் எந்நாளோ ?

2. நம் இளைஞர் நங்கையர் தென்றலிலும் பிற அறிவிதழ், கலையிதழ்களிலும் எழுதும் இனிய காதல் கதைகளில் மலைகள் வானகத்துக்கு முத்தம் தருவதையும், மயில்கள் காதலியர் சாயலுக்கு நாணுவதையும் திங்கள் காதலியரைக் கண்டு நாணி முகிலாடைக்குள் மறைவதையும் எடுத்தெழுதுவதில்லையா? 'கேட்குந போலவும் இளக்குநபோலவும்... அஃறிணை மருங்கினும் அறையப்படுமே' என்று தொல்காப்பியர் இதற்கு இலக்கணம்கூடக் கூறியுள்ளார்.

முல்லைக்குத் தேர் ஈந்த பாரி, மயிலுக்குப் போர்வை தந்த பேகன் செயல்கள் இவற்றைவிடவா அறிவுக்குப் பொருத்தமற்ற கற்பனை?

அறிவுக்குப் பொருத்தமற்ற கற்பனை இச்செயல்களிலல்ல காணப்படுவது, இவற்றைக் கம்பர் கற்பனையுடன் செய்யும் நம் இளைஞர், நங்கையர் கற்பனை மரபில்தான் அதைக் காண்டல் வேண்டும்.

'வீரன் விழுகிருன். அதைக் காணப் பொருமல் கதிரவன் வானில் சாய்கிருன்' இங்கே வீரன் விழுவது உண்மை. கதிரவன் சாய்வது உண்மை. கதிரவன் சாய்வது உண்மை. இரு படங்களையும் ஒரு வளர்ச்சிப் படக் கோக்கும்கவிஞன் கலையே கற்பனை. அணி நூலார் இதனையும் இதுபோன்றவற்றையும் அணிகளில் சிறந்த ஓர் அணியாக, தற்குறிப்பேற்ற அணியாக வகுத்துள்ளனர்.

முல்லைக்குத் தேர் ஈந்த பாரி, மயிலுக்குப் போர்வை தந்த பேகன் இயற்கையோடல்ல, வாழ்க்கையோடு ஒட்டவைத்துச் சங்கக் கவிஞர்கள் தீட்டிய ஓர் ஒப்பற்ற அணி. அது தற்குறிப்பேற்ற அணி வகுத்தவர் வகுத்துக் காட்டாத ஓர் உயர் அணி. சங்கக் கவிதைகளில் மட்டுமே காணத்தரும் பல்வகைப் பெயர் வகுக்கப்படா அணிகளில் ஒன்று.

உணர்ச்சி உச்சநிலை செல்லும் சமயம் மனிதன் செய்யும் சிறு செயல்கள் அந்த உணர்ச்சியின் அளவைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. பாரி முல்லைக்குத் தேர் ஈர்த்தது உண்மை. புலவர் அதைக் கண்டார். ஆனால் தேரை அவன் முல்லையருகில் விட்டதற்கு காரணமான உணர்ச்சியைமட்டுமே கவிஞர் சித்திரிக்கிருர். அவன் செயல் மடமைதான், காதலருமை தெரிந்த காதலன் வண்டினிடம் கொள்ளும் ஒத்துணர்வு போன்றது அது. அல்லது காதலி தன் துயரைப் பூவின் நிலையுடன் ஒப்பிடுவது போன்றது. ஆனால் அது அவ்வுணர்ச்சிக்குச் சாகாப்படமாகிறது.

'மயிலுக்குப் போர்வை தந்த பேகன்'—அவன் தன் மனைவி கண்ணகி துயர் அறியவில்லை. இதை இடித்துக் காட்ட அவன் இயற்கைக் காட்சிபற்றிய சித்திரம் அவர்கட்கு உதவுகிறது. இங்கே அணி மட்டுமல்ல, நகைச் சுவை நயம் களியும் வகைச் சுவையும் அறிவும் சுவையும் ததும்புகின்றன.

முட்டையைக் கொல்லாத அகிம் சாவாதிகள் கன்றுக்குரிய பாலை ஒட்டக் கறப்பதில்லையா? பொன் கட்டியையும் மண் கட்டியையும் ஒப்ப நோக்கும் வேதாந்திகள் பார்ப்பனன் வேறு பறையன் வேறு என்று கருதுவதில்லையா? இத்தகைய முரண்பாடுகளை அறிஞன் காட்டுவதுபோலச் சங்ககாலக் கவிஞர் ஒருபுறம் உணர்ச்சி நயமிக்க காட்சி தொகுத்து, மறுபுறம் அவற்ருல் வாழ்க்கைக்கு ஒப்பற்ற படிப்பினையும் காட்டுகின்றனர். ★

டிசம்பர் இதழ்

முல்லை

விற்பனையாகிறது!

★

விலை : எட்டணு

நீ உயர்ந்தவள்!

ஓடி வரும் வைகைதான், காடு தோறும் ஓடிப் பாயும். பெருமலையாய் நிற்கின்ற கோயிலின் மேல் மேகம் வந்து சாயும்! தண்டலையிலே மயில்கள் ஆடும். தாமரையிலே வண்டுகள் தூங்கும்! காய் கதிரோனும்- தேய் வளர் நிலவும்-வாழ்க **வணங்காமுடி பாண்டியன்**, என வாழ்த்தியிருந்தகாலம் வளமிக்க மதுரையை, தலைநகராக வைத்து பாண்டியன் ஆண்ட நேரம்.

புலவர்கள் தமிழ்ப் பயிர் செய்த பூமியும்-புரவலர்கள் நீதி பிறழாது அரசு புரிந்த நாடும் அதுவே. வட்ட முகிலைத் தொட்டுத் தழுவுமளவுக்கு மீனக் கொடியினை வானளாவ கட்டிவிட்டான்! வணங்காமுடி.

பாண்டி மாதேவி- அரசருக்கு 'வேண்டியபோது பெய்யும் மழை!' மதி நலமும்--கற்பெனும் நல்ல நிதி நலமும் பெற்றவர்கள். அச்சமே உயிராகி- அறமே உடலாகி- நாணமே சொல்லாகி-துணைவரே தெய்வமாகி இருந்ததினுல் சேமமுற்ருன் வணங்காமுடி-செழிப்புற்றது பாண்டியமும். அனுப்பியது... கலைப்பெருக்கும், கல்விப்பெருக்கும் செய்த மூன்ரும் தமிழ்ச்சங்கம் பள்ளத்தில் விழுந்துவிட்ட குருடன் போல், கால வெள்ளத்தில் அழிந்துவிட்டது! வடக்கே வாழ்ந்து கொண்டிருந்த **'பொய்யா மொழி'** எனும் புலவருக்கு இச்சேதி வந்தது!

கடலுக்கு அப்பாலும் புகழ்ச்சி கொண்ட தமிழ்த்தாய்க்கு - இன்று முடக்க நோயா? தேமதுரத்தமிழ் அழிய-நாமம் அது தமிழன் எனக் கொண்டு பாண்டியன் இருக்கின்ருனு? பாமரனே! பாமரனே! எனப் பதறி பல்லக்கு ஏறி, பாண்டியத்துக்குப் புறப்பட்டார்.

மதுரை வந்தார். மன்னனைக்காணவில்லை. ஆலயத்துக்குப் போயிருப்பதாக அறிந்தார். வையத்தை ஆளுகின்ற இறைவன், கல்லாகி நிற்கின்ற தெய்வத்தை தலைகவிழ்ந்து வணங்குகின்ற காட்சி கண்டான்!

"உள்ளத்தில் உண்மை ஒளி வேண்டுமெனில் மன்னு! முதலில் உனது அன்னைக்கு வணக்கஞ் செய்! உயர்வு செய்!" என்ருர் பொய்யாமொழி. திடுக்கிட்ட பாண்டியன் 'தெள்ளுதமிழ் அமுதின் சுவை கண்ட புலவரே! வருக!" என இரு கரத்தால் அழைத்து, இதயத்தோடு இதயம் சேர்த்து வரவேற்ருன்.

"இறவாத தமிழுக்கு - திறமான நான்காம் சங்கம் காண வந்தேன்" என்று புலவர் கூறிட, இதை நிறைவேற்றுவதாக மன்னன் சொல்லி சில நாட்கள் செல்ல.....மதுரையில் மழை வளம் குறைந்தது. பயிர்கள் தீய்ந்தது. பயம் வளர்ந்தது. மக்கள்பால் அமைதி இல்லை என்று கண்ட 'மன்னன்மென்பதை காக்கும் நன் குடிப்பிறத்தல் துன்பம்! துன்பம்!' என்று எண்ணியிருந்தான். எனவே, தங்கநிலா-முழுநிலா ஆவதற்குள் தமிழுக்குச் சங்கம் அமைத்துத் தருகிறேன் என்று சொன்ன சொல்லை அறவே மறந்துவிட்டான். புலவருக்குச் சினம் மூண்டது! "சொன்ன சொல்லுக்கு மரியாதை தருமல்-நெல்லுக்கும், வில்லுக்கும் அலைகின்ற பாண்டியா! தமிழுக்கு நலம் காணுர் நாட்டில் வளம் ஏது? வாழ்வேது?" என்று வசைபாடிவிட்டு, வடக்கு நோக்கி பல்லக்கில் விரைந்தார்.

வீரர்கள் சிலருக்கு புலவர் வெகுண்டுபோன விஷயம் விளங்கிவிட்டது. விரைந்தோடினர் அரண்மனைக்கு. பாண்டிமாதேவி முன் வீழ்ந்தனர். "அம்மா! தமிழுக்கு ஏற்றம் காணவந்த புலவர். மன்னரின் அலட்சியத்தால் சீற்றம் கொண்டு போய்விட்டார்" என்றனர்.

தமிழரசி இதைக் கேட்டாள். "தமிழ்ப் புலவர் மனம் புண்பட்டதா? அது திரை கடலின் கொந்தளிப்பினும் தீதாயிற்றே? வாள் சுழற்றி உடல் அசைத்து வருகின்ற வேங்கையினும் கொடியாதயிற்றே? புகைவிடும் எரிமலை- பகை கொண்ட தமிழறிஞன் ஒன்றன்ரே? நகைமுகத்தான் என் மன்னன் எங்கே?" என்று அத்தாணி மண்டபத்துள் ஓடினுள். முத்தாரம் அறுந்ததுபோல் முகத்தில் வியர்வைத் துளி ஓட-மன்னர் பெருமான் மஞ்சத்தில் மெய் மறந்து துயின்றிருந்தான். மனம் ஒடிந்தாள்! கணவரின் தூக்கத்தைக் கலைத்தல் கொடியது! கவியரசர் இந்நாட்டின் எல்லையைத் தாண்டினுல் அது இதைவிடக் கொடியது!

எழுப்பினுல் மன்னருக்கு துன்பம் நேரும்! எழுப்பாவிட்டால் நாட்டுக்கு இன்னல் வந்து சேரும்! என் செய்வாள் அரசி?...மலர் சுற்றும் வண்டுபோல்-அரசி மனம் சுற்றி வந்தது.

★

ஒரு வீரன்-சேவக உடையோடு கையினிலே வாளோடு, தலையினிலே குல்லாயோடு, ஓடுகிருன். நாடும், காடும் தாண்டி நடக்குதான் புலவரின் பல்லக்கு. வீரன் மீண்டும் ஓடுகிருன். நெருங்கிவிட்டான். புலவருடைய பல்லக்கின் ஒருபுறத்தில், தன் தோள் போட்டான். பல்லக்கு ஆடியது! புலவர் திடுக்கிட்டார். "என் அரும் நண்பர்காள்! ஏனிந்த நடுக்கம் என் பல்லக்கில்?" என்ருர்.

"ஐயனே! யாரோ ஒரு வீரன் தோள் கொடுத்தான்!" என்ருன் ஒருவன்.

"தோள் கொடுத்தான் ஒருவனு? ஆ! பாண்டியன் ஆள் விடுத்தானு? யாரவன்?" என பட்டுத்திரை விலக்கி-சற்று எட்டிப் பார்த்தார். புதிய சேவகனை.

அகல விழிகள் திறந்து பார்த்தார். அசைவற்றுப்போனுர். "அம்மா! அம்மா!" என்று அந்த புதுச் சேவகனின் அடிவிழுந்து வணங்கினுர். "தேவீ! ஈதென்ன நீதி? மயில் தோகை மிதித்தாலும், பொறுக்கெழும் உங்கள் மலர்க் கால்களால், கல்லும், முள்ளும் மிக்க இக்காடு ஏன் கடந்து வந்தீர்?...உங்கள் தோள்களிலா, இந்தப் பாபியை ஒரு நொடி சுமந்தீர்?...ஐயோ! மென்மையும், கற்பின் நன்மையும் மிக்க தாயே! என்னை மன்னியுங்கள்" என்று அழுதார். தாய் அவரை தொழுதார். கூப்பிய கரத்தோடு, கண்ணீர் வழியும் முகத்தோடு.

"கவியரசே! எந்தன் புவியரசரால் உள்ளம் புண்பட்டீர் என்று என் செவி கேட்டது. எலும்பையும் பெண்ணுக்கும் உயர் தமிழால், நீங்கள் என் துணைவரை சபித்தால், கொடியேது? முடியேது? வெண்குற்றக் குடையேது? வீடேது, வாழ்வேது? நாடேது? என் பொருட்டு அவரை மன்னிக்க வேண்டுகிறேன். மனம் கனிந்து வருக! நாளையே தமிழ்ச்சங்கம்அமைக்க!" என்று மாதரசி மன்ருடினுள்.

கொழு நான் வாழ-அவனுல் குடிமக்கள் வாழ அழுதும், தொழுதும் ஆண் வேடமிட்டு வந்து-பல்லக்கு சுமந்தும்புலவரைத் தேற்றி, சினத்தை மாற்றி, அன்பையேற்றி, கற்பில் வெற்றி கொண்ட பாண்டிமா தேவியின் பெருமையினை புலவர் ஒரு முறை எண்ணினுர். உள்ளம் உருகியது. வெள்ளம் போல் ஒரு நேரிசை வெண்பா வருகிறது:—

"உமையாளும் நீயும்
ஒருங்கொப்பே, ஒப்பே!
உமையாளும் அங்குண்டோர்
ஊனம், உமையான்தன்
பாதந்தோய்ந்தாண்டான்
பலிங் குழன்ருன் பாண்டியன்
நின்
அகந்தோய்ந்தாண்டான்
அரசு!"

தாய் எனும் கருணையாலே எனை காத்த தேவி! நீ உத்தமி! உமையாளினும் உயர்ந்தவள்! ஒருபோது உமாதேவியிருந்தும் சிவன்பிச்சைக் காரனுய் அலைந்தான். ஆனுல் பாண்டிமாதேவி உன்னைப் பெற்றதால் வணங்காமுடி என்றும் மண்ணை மகிழ்வோடு ஆளுகின்ருன். உன்னைப் பெற்ருன். இன்று என்னைப் பெற்ருன். நாளை தமிழ் அன்னைச் சங்கம் பெற்ருன. என்று புலவர் வாழ்த்திட- உன்னையே விட்டு நீங்க உளம் இல்லாமல் திகைக்கின்றேன் என்று கூறி- தன்னைப் பெற்ற தாய்போலும் பாண்டிமாதேவி மதுரை போக- பின்னை புலவரும் போனுர்!

-கோ. இறைமுடிமணி

எமது புதிய வெளியீடுகள்!

தித்திக்கும் தேன் தமிழ்! தெவிட்டாத அழகு நடை!
உள்ளத்தைத் தொடும் உணர்ச்சி மிகு கட்டங்கள்!!
சிந்தனையைத் தூண்டும் துலாக்கோல்!!!
அத்தனையும் நிறைந்தது
கலைஞர் மு. கருணநிதி தீட்டிய

'கண்ணடக்கம்'

விலை ரூ. 1-00

சுதந்திர தாகம் கொண்ட வீரன் ஒருவன்—ஆனுல் அதே கொள்கை கொண்ட அந்த வீரனைக் காதலிக்கும் வனிதை ஒருத்தி—பாரில் தனக்கு நிகர் யாருமில்லை என்று வெற்றி முரசு கொட்டிய வேந்தன் ஒருவன்—இவர்கள் அத்தனை பேரையும் தன்வேல் விழியால் வீழ்த்திய வரலாறு!

கே. ஜி. இராதாமணளன் எழுதிய

'எழிலரசி கிளியோபாட்ரா'

விலை ரூ. 1-50

விடுதலைப் பசிக்கொண்ட வீரபாண்டிய கட்டபொம்மனின் கொக்கரிப்பு—அதிகாரப் பசிக்கொண்ட அந்திய இனத்தாரின் ஆர்ப்பரிப்பு—பதவிப் பசிக்கொண்ட இனத்துரோகிகளின் சலசலப்பு—இவற்றின் விளக்கக் கண்ணடியே

கே. ஜி. இராதாமணளன் எழுதிய

'பசி'

விலை ரூ. 1-00

திராவிடப் பண்ணை
தெப்பக்குளம் :: திருச்சி-2.

தமிழில் அணிகள்

"அணிகள்"- இச்சொற்கள் செவியிற் புகுமுன்பே, பெண்கள் தம்மை அழகு செய்ய அணியும் அணிகலன்களே நினைவில் வருதல் இயல்பு. ஆம்! பெண்களை அழகுபடுத்துவதும் அணிகளே; அஃதேபோல், கவிதையை அழகு செய்யும் அணிகளும் உள.அவற்றில்சிலவற்றை ஈண்டு நோக்குவோம்.

"ஆரியவன் உரைசெயப்
பரதன். 'ஐய! நிற்
பிரிவெனும் பிணியினல்
என்னைப்பெற்றஅக்
கரியவன் வரமெனும்
காலனல் தனக்(கு)
உரியமெய் நிறுவிப்போய்
உம்பரான்!' என்ருன்."

—கம்ப இராமாயணம்

இப்பாட்டைப்பார்க்குங்கால்,கவியெனும் தித்திப்புப் பொருளில் ஆரியப் பண்பாடெனும் தீங்கான போதை தரும் பொருளைக் கலந்து தந்து, திராவிட இனத்திற்குக் கேடு விளைவித்து, திராவிடர்களுக்குத் துரோகம செய்த கம்பனின் மேல் கடுஞ் சீற்றம் ஏற்படுவதும், "தீ பரவட்டும்" எனக் கூறத் தோன்றுவதும் இயற்கை. எனினும், இழி கருத்தை வெறுத்தொதுக்கி, "எழில் தமிழின் நயம் பாரீர்"! என்று வேண்டி, எழுதுகோலை மேலே ஓட்டுகிறேன். "இராமனின் பிரிவாற்ருமையால் தசரதன் இறந்தனன்" என்பதைக் கூறப் புகுந்த கம்பன், பிரிவைப் பிணியாகவும், தசரதன் கைகேயிக்குக் கொடுத்த வரத்தைக் காலனுகவும் உருவகப்படுத்துகின்ருன். இங்ஙனம் அமைதல் 'உருவக அணி' எனப்படும்.

"உறுபொருள் கைவர
உவகை மீக்கொளும்
வறிஞனை நிகர்த்தது;
மண்ணெ லாம்புகழ்
அறிவுடை அண்ணல்பா
லாடித் தேர்பெறு
விறலியும் நிகர்த்ததவ்
வீகொள் முல்லையே"

—கொடை மன்னர் பனுவல்.

இப்பாட்டில் ஆசிரியர், பாரியினல் தேர் கொடுத்து ஆதரிக்கப்பட்ட முல்லைக்கொடி, பெரும்பொருளும் அடையப் பெற்ற வறிஞனையும், மண்ணெலாம் புகழ்கின்ற பாரியின்பால் ஆடித் தேர் பெற்ற விறலியையும் நிகர்த்தது எனக் கூறுகிருர். இது "உவமை அணி" எனப்படும்.

"செல்வத்துட் செல்வம்
செவிச்செல்வம்; அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை."

(திருக்குறள்)

இக்குறட் பாவில் 'செல்வம் என்னும் ஒரே சொல், ஒரே பொருளில் மீண்டும் மீண்டும் வருகிறது. இங்ஙனம் வருதல் "சொடபொருட் பின்வரு நிலையணி" எனக் கூறப்படுகிறது.

"மன்னவன் செல்வுழிச்
செல்க யானெனத்
தன்னுயிர் கொண்டவ
னுயிர்தே டினள்போல்
பெருங்கோப் பெண்டும்
ஒருங்குடன் மாய்ந்தனள்."

-சிலப்பதிகாரம்; காடசிக் காதை

கற்பிற் சிறந்த கண்ணகியின் மொழி கேட்ட பாண்டியன் நெடுஞ்செழியன், அரியணையினின்று வீழ்ந்து உயிர் துறந்தான். அவனின் இல்லாள் பெருங்கோப் பெண்டும், தன்னுயிரைக் கொண்டு மன்னவனுயிரைத் தேடுவாள்போல, அவனுடனேயே உயிர் துறந்தாள். இங்ஙனம் சிலப்பதிகாரம் செப்புகிறது. எனினும், காதலன் துன்பத்தைக் காண விரும்பாது, பெருங்கோப் பெண்டு இறந்தனளேயொழிய, தன்னுயிர்மூலம் காதலனுயிரைத் தேடுவதற்காகவல்ல. இவ்வாறு, கவி தான் எண்ணும் கருத்தைப் பாவில் ஏற்றிச் சொல்வது "தற்குறிப் பேற்ற அணி" என்று அழைக்கப்படுகிறது.

உருவக அணி, உவமைஅணி, சொட்பொருட் பின்வரு நிலையணி, தற்குறிப்பேற்ற அணி முதலிய சில அணிகளைப்பற்றி ஈண்டு கவனித்தோம். இன்ன பிற அணிகள் எத்தனையோ, கன்னித் தமிழில் உள்ளன.

இத்தகைய ஈடு இணையற்ற, எழில பல கொண்ட நந்தமிழ் மொழியை நசுக்கும் பொருட்டுத் தான், இலக்கண இலக்கியம், இயற்கை எழில், சொல்வளம்- இவை ஏதுமற்ற இந்தி ஏவப்படுகிறது. முறைதானு?

-புவிக்கோன்



வாழ்க மணமக்கள் !

ஏ. எல். எஸ். புரொடக்ஷன்ஸ் உரிமையாளர் ஏ. எல். சீனிவாசன், ஆசிரியர் கண்ணதாசன் ஆகியோரது சகோதரியின் புதல்வியும், நாச்சியாபுரம் சுப. சொ. சுப்பிரமணியம் (செட்டியார்) அவர்களின் புதல்வியுமான திருமதி **இலக்குமிக்கும்,** நாச்சியாபுரம் பழ. கண. நாச்சியப்ப செட்டியார் அவர்களின் மகனும், இலண்டனில் டெலிவிஷன் ரேடியோ சர்வீசில் இன்ஜினியராகப் பணிபுரிந்து வருபவருமான **நா. கண்ணப்பனுக்கும்** கடந்த 28-11-57ம் தேதி வியாழக்கிழமை நாச்சியாபுரத்தில் மிகச் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. உறவினர்கள், நண்பர்கள், படமுதலாளிகள் ஆகியோர் வந்திருந்து மணவிழாவைச் சிறப்பித்து மணமக்களை வாழ்த்தினர்.

— 1ம் பக்கத் தொடர்ச்சி —

இன்றைய தமிழ்நாட்டு அரசியலை நடத்திச் செல்லுவோருக்கு பெருந்தன்மை இருந்திருக்குமாஞல், அண்மையில் தஞ்சையில் நடந்தேறிய பாராளுமன்ற உபதேர்தலில் செங்கல்வராயனை நிறுத்தியிருக்கலாம். செங்கல்வராயன் டில்லிக்குப் போவதிலே அர்த்தமிருக்கிறது. ஏன் நிறுத்தப்படவில்லை ? நிறுத்தப்பட்டு வெற்றிபெற்றவர் என்ன, செங்கல்வராயனைக் காட்டிலும் படித்தவரா, திறமைசாலியா? இல்லை !

இவைகளுக்கெல்லாம் ஒரு காரணம் சொல்லப்படுகிறது. காலஞ்சென்ற சத்தியமூர்த்திக்கு இரண்டு பிரதம சீடர்கள் என்றும், ஒருவர் உழைப்பாளி என்றும், மற்ருெருவர் பட்டதாரி என்றும், குருவின் அன்பைப் பெற இரண்டு சீடர்களுக்குமிடையில் எழுந்த தகராறுகள் இன்று பல உருக்களில் நாட்டியமாடுவதாகவும், அதனுல்தான் உழைப்பாளியால் பட்டதாரி பழி வாங்கப்பட்டு வருகிருர் என்றும் காங்கிரஸ் வட்டாரத்தில் - மிகப் பெரியவர்கள் பேசிக்கொள்கிருர்கள். இதில் உண்மை இல்லாமலில்லை. அந்த உண்மை எத்தனை சதவிகிதம் என்பது தான் தெரியவில்லை. ★

— 3ம் பக்கத் தொடர்ச்சி —

வாலிபர்களிடமும் அதே நிலைதான். குண்டுச் சத்தங்கள் ஓய்ந்தன. போலீஸ்காரர்களின் தொப்பிகளும், ஒடிந்த துப்பாக்கிக் கட்டைகளும் தெருவில் சிதறிக் கிடந்தன. களத்திலே மாண்ட சாவேஜின் பிணத்தை அடக்கம் செய்யக்கூட வாலிபர்களுக்கு நேரமில்லை. பிணத்தை ஒதுப்புறமாக இழுத்துப்போட்டு விட்டு ஓடிஞர்கள். நகரில் பரபரப்பு!

மறுநாள் காலை, வாலிபர்கள் எதிர்பாராத விதமாக ஒரு செய்தி அயர்லாந்து அரசாங்கத்தாரால் பிரகடனப்படுத்தப்பட்டது. அது இது :

"வைஸ்ராய் லார்ட் பிரஞ்ச் அவர்களைக் கொல்ல அயர்லாந்து புரட்சி வாலிபர்கள் எடுத்துக்கொண்ட முயற்சி தோல்வி கண்டது. சதித்திட்டத்தை முன்கூட்டியே அறிந்த லார்ட் பிரஞ்ச், போலீஸ்காரன் உடையில் பீனிக்ஸ் மாளிகை சேர்ந்தார். லார்ட் பிரஞ்சைப் போல் வேடமிட்டு, மோட்டாரில் அழைத்து வரப்பட்ட ஐரிஸ் விவசாயி சுட்டுக் கொல்லப்பட்டார்."

— இளைஞர் தலைவனின் நெஞ்சம் தீக்கிடங்காயிற்று. அன்று கொழுந்துவிட்ட விடுதலை வேட்கை, அவனது இதயத்திலிருந்து நீங்கவே இல்லை. அவன் யார் தெரியுமா? இன்று அயர்லாந்து போற்றிப் புகழும் **தான்பீரின்** தான் அந்த வாலிபர் தலைவன். ★

எங்கும் கிடைக்கும்.

— 2ம் பக்கத் தொடர்ச்சி —

முனிவர் அணியும் ஜடாமுடி, காவி உடை, வெண்மையான திருநீறுப்பை, அமரும் மணை, மயில் தோகை-ஆகிய உறுதுணையுடன் போருக்குப் புறப்படுவார்களாம். இந்தப் புல்லேந்திக் கும்பல் இன்று வில்லேந்தும் நிலை கண்டு சிலம்பு சிரிக்கின்றது. முனிவருக்குரிய மாற்றுடைமட்டுமல்ல; போரிலே புறங்கண்டால் உடனேயே துறவி வேடம் பூண்டு, பூண்டதுடன் பல பக்திப் பாடல்களை முன்னர் இதற்காகத் துறை போகக் கற்றனவற்றைப் பாடத் தொடங்கிப் புறப்படுவராம். 'தாம் கற்று வல்ல பல வித்தை தகட்குரிய கோலங்கள் உடையவர்' என உரைகாரர் உரைக்கின்றார். போரிடப் புறப்படும்பொழுதே நம்பிக்கையற்ற முதுகெலும்பு அற்ற கூட்டம் முனிவன் வேடம் பூண்டு, தமிழ் மன்னன் முன் சென்றால் கொல்லாது விடுவான் எனத் தெரிந்து செய்திருக்கின்றனர். இந்த அளவு கேவலமான நிலையை உடைய வீரம்படைத்த வடவாரியர்கள் தங்கள் உண்மைக் கோலத்தை எப்படி வரலாற்றிலோ, இலக்கியத்திலோ, சாசனத்திலோ தெரியவிடுவார்கள்? இவ்வாறு இருக்கும் செய்தியை வடநாட்டு வரலாற்று விற்பன்னர்கள் எழுதவும் கூசுவார்கள். ஆனால் இந்தச் செய்தி உண்மை என்பதற்கு நமக்கு 'சிலம்பு'தான் ஆதாரம்.

ஆரிய மன்னர்கள் எப்படிப் போர் செய்தனர், வீரர்களின் தன்மையை இளங்கோ காட்டுகிறார்:

"சடையினர் உடையினர்
சாம்பற் பூச்சினர்
பீடிகைப் பீலிப்
பெருநோன் பாளர்
பாடு பாணியர்
பல்லியத் தோளினர்
ஆடு கூத்த ராகி யெங்கணும்
ஏந்து வாளொழியத்
தாந்துறை போகிய
விச்சைக் கோலத்து
வேண்டுவயிற் படர்தர"
(கா. கோ. 225-230.)

இந்தச் செய்தியை, எட்டு ஆரிய மன்னர்களுடன் கனக விசயர் போரிட்ட உண்மையைத் தக்க வரலாற்றுச் சான்றுகளுடன் அவர்கள் கனிஷ்கருக்குப் பின் வந்தவர்கள் என்று திரு: கோவிந்தசாமி (பிள்ளை) என்ற கால்லஞ்சென்ற வரலாற்று விரிவுரையாளர் எழுதினார்கள். அவர்கள் உயிரோடு இருக்கும்வரை கையெழுத்துப் பிரதியாக வைத்திருந்து, அன்னார் இறந்த பின்னர் ஆரியப் பேராசிரியர் ஒருவரின் அடாச் செயலால் இந்தக் குறிப்பிட்ட தென்னவர் வெற்றி பெற்ற (எண்மரைப் பற்றிய) செய்தியைமட்டும் நீக்கிவிட்டுப் பதிப்பித்துள்ளனர். ஆனால் அந்தச் செய்தியை எழுத்துப் பிரதியில் பார்த்த பெருமக்கள், அறிஞர்கள் இன்றும் உள்ளனர். காலம் வெல்லவில்லை-காத்திருக்கும் அறிஞர், செந்தமிழ்க் காவலர் நந்தமிழ் உலகிற்குக் காட்டும் காலம் வந்தே தீரும்.

மேலே குறிப்பிட்ட செய்தி இதோடு தொடர்புடையது என்பதால் உலக மக்கள் முன் வரவிருந்த உண்மையை மறைத்த ஆரியர்கள் போக்குக்கு ஒரு சிறு எடுத்துக் காட்டே தரப்பட்டது. இன்று வளர்ந்து வரும் சமுதாயத்திலே இப்படி என்றால் வெள்ளை உள்ளம்கொண்ட பழங் காலத்தில் எதைத்தான் எழுதியிருப்பார்கள்?

எனவே "சிலப்பதிகாரம்" இவை இவை, இன்ன இன்ன நாளில் நடந்தன என்று வரலாறாக வரையாமல் தொகுத்து, இயன்ற இடத்தில் வகுத்தும் இலக்கிய நயம் சிறிதும் கெடாமல் வரலாற்றினைக் காட்டுகின்றது என்பதால் வருங்கால வரலாறு வரையும் விற்பன்னர்கள் 'சிலம்பை' நுணுகி ஆராய வேண்டும் என்பதே தமிழரின் ஆவல்.

—அரிமழம்-கதிரவன்

பண்டிதர் - பருவம் ஆறு

கார்

எங்கும் மழை. குளம் குட்டைகளில் நீர் வழிந்தோடுகிறது.

இரல் விழுந்த கிராமப்போன் தட்டைப்போல் தவளை ஒரே இராகத்தில் கத்துகிறது. 30-11-57ம் நாள் மராட்டியத்தில் சிவாஜியின் உருச்சிலையைத் திறந்து வைத்து நேருப் பண்டிதர் வருமாறு கூறியுள்ளார்: நீங்கள் பேசும் மராட்டியம் சிறப்பு வாய்ந்தது. இருப்பினும் நீங்கள் இந்தியர்களே. இமயம் முதல் குமரி வரை உங்கள் நாடே. இப்போது வேண்டுவது ஒற்றுமை. நம் கோபதாபங்களை மறந்து நம் நாடு ஒன்று, நம் இனம் ஒன்று, நம் பண்பு ஒன்று என நினைத்து ஒன்றுபடுவோமாக."

அமைதி காலத்தில் நாட்டில் ஒற்றுமை குறித்து அடிக்கடி தலைவர்கள் பேசி வருவது உலகில் வேறு எங்கும் காண இயலாது.

கூதிர்

மழை ஓய்ந்தது. கொஞ்சம் நிம்மதி. சிந்தனை ஓடுகிறது. சென்ற கிழமை ஒரு இடத்தில் நேருப்பண்டிதர், தனக்கு நாள், நட்சத்திரம் பார்க்கும் மூடப்பழக்க வழக்கங்கள் பிடிக்காது என்றார்.

முன்பனி

பனி ஆரம்பித்ததும் நடுக்கம் ஆரம்பமாகிறது. வாய் உளறுகிறது. 28-11-57ம் நாள் டில்லி பாராளு மன்றத்தில் திரு. டி. டி. கே. அமெரிக்கப் பத்திரிகை நிருபரிடம் மாட்டிக் கொண்டதைச் சப்பைக்கட்டிப் பேசும்போது நேருப் பண்டிதர் பின்வருமாறு கூறியுள்ளார்: "எவ்வளவோ நல்லெண்ணத்துடன் இருந்தும், நான்கூட வாய் தவறி ஏதாவது கூறிவிட்டுப்பின் அதற்காக வருந்தியிருக்கிறேன்."

"யாகாவாராயினும்" என்ற குறள் படித்தால் இக்குறை குறைந்துவிடும்.

பின்பனி

சென்ற வாரம் ஒரு இடத்தில் நேருப் பண்டிதர் பின்வருமாறு மொழிந்துள்ளார்: "நான் நோய்வாய்ப்பட்டு அவதியுற்றுச் சாவதை விரும்பவில்லை. மகாத்மாவிற்கு வாய்த்ததைப்போல் திடீர் மரணத்தையே வரவேற்கிறேன்."

திராவிடக் குடியரசு மலர்ந்துவரும் இந்நாளில் பண்டிதருக்கு ஏதும் வரக்கூடாது என்பதே நம் விருப்பம்.

இளவேனில்

மகிழ்ச்சியூட்டும் பருவம். 29-11-57ம் நாள் கான்பூரில் நடந்த பாரத் சேவக் சமாஜ் கூட்டத்தில் நேருப் பண்டிதர் வருமாறு கூறியுள்ளார். "நான் ஒரு வணிகன். என் சரக்குகள் நட்பு, நல்லெண்ணம், அமைதி. உலகெங்கும் அவைகளை விற்று வருகிறேன்."

பண்டிதர் பெருமகனாரே! உங்கள் சரக்குகளில் கொஞ்சம் தமிழ்நாட்டிற்கு ஈந்தால் குறைந்தா போய்விடுவீர்?

முதுவேனில்

ஒரே வெய்யல். உடம்பெல்லாம் சூடு ஏறுகிறது. மூளை கொதிப்படைகிறது. 28-11-57ம் நாள் பத்திரிகையாளர்களிடை பேசும்போது நேருப் பண்டிதர் வருமாறு கூறியுள்ளார்: தமிழ்நாட்டில் நடந்த திராவிடக் கழகத்தின் சட்ட எரிப்புப் போராட்டம் காட்டுமிராண்டித்தனமானது. எந்தப் பண்புள்ள சமுதாயமும் இதைச் சகிக்காது. இந்த முட்டாள்தனமான செய்கையைவிட, இதை முக்கியமான சிலர் ஆதரிக்க முற்படுகிறார்களே என்பதுதான். என்னைப் பெரிதும் வாட்டுகிறது."

நாடகத்தில் மருத்துவர் வேடம் தாங்கி நடிக்கும் ஒருவனுக்கு நோயைப் பற்றி என்ன தெரியும்? உண்மை மருத்துவருக்கல்லவா நோய் ஏற்படக் காரணம், நோயின் தன்மை, குணப்படுத்தும் முறை இவைகள் தெரியும்!

—ஒளி.

கதி. இராமனுதன்

தென்றல்-விளம்பர நிர்வாகி கதி. இராமனுதன் அவர்கள், பொங்கல் மலருக்காக விளம்பரம் சேகரிக்க, கடந்த 29-ம் தேதியன்று சுற்றுப்பயணத்தைத் தொடங்கியிருக்கிறார். தென்றல் வளர்ச்சியில் ஆர்வங்கொண்ட தோழர்களும், வணிகப் பெருமக்களும் இயன்றஅளவு விளம்பரம் சேகரித்துக் கொடுத்து அவரோடு ஒத்துழைக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

—கண்ணதாசன்



8. 'காய்' எனத் தொடங்கி 'பழம்' என முடித்தல்

காய்ந்தவடு வேய்க்கும் கயற்கண்ணுய் ! உன்பெருமை
வாய்ந்ததமிழ்ப் பாட்டைநான் வாழ்த்தேனே-தீய்ந்துவட
நாட்டிந்தி எந்நாளும் நஞ்சேயாம் உன்தமிழ்ப்
பாட்டே கதலிப் பழம்.

—கோ. ப. பிரின்சு, பி. ஏ., பி. டி., காரைக்குடி.

❁

காய்த்துக் குலுங்கும் கனிமரம்போல் தென்னகத்தில்
வாய்த்த கழகங்காண் வண்டமிழா-தாய்த்திரு
நாடாம் திராவிடத்தில் நல்லாட்சிப் பூங்களிப்பில்
பாடிச் சுவைப்போம் பழம்.

—சி. முத்தையா, தூத்துக்குடி.

❁

காய்பரிதிக் கீடாமோ கண்பறிக்கும் மின்விளக்கு !
தாய்மொழிக்கு இந்திமொழி தூசாமே-வையத்தில்
மாணிக்க மேகலையும், மாண்புச் சிலப்பும்நற்
றேனிற் குழைத்த பழம் !

—ந. தா. அண்ணுமலை, கடலூர்.

❁

காய்ந்த சமயமதில் கன்னித் தமிழ்நூலைப்
பாய்ந்தே எடுக்கப் பசிதீரும்-ஆய்ந்தபுகழ்
முந்தைத் தமிழ்நாடு காண அறுத்திடடா
பைந்தமி ழின்பப் பழம்.

—நா. இளங்கீரன், திருவையாறு.

❁

காய்போல் கசந்திடுமே காய்சினத்தார் ஈயுமொழி
பேய்போல் அலைகின்றார் பேசுகின்றார்-ஓய்வின்றி
இந்தித் தடியால் இவரடித்தால் கன்றிடுமோ
பைந்தமிழாம் எங்கள் பழம்.

—புலவர். சி. அப்பாவு, அண்ணுமலைநகர்.

❁

காய்கின்ற வெண்ணிலவில், கட்டழகே, ஓடிவந்(து)
ஓய்வின்றி ஏதேதோ ஓதுகிருய் !-நேயமுடன்
அட்டியின்றித் தந்திடடீ ஆரணங்கே, உந்தனெழில்
பட்டுநிகர் கன்னப் பழம் !

—க. தங்கவேலன், சேர்வைநகர்.

❁

காய்கின்ருய்; சற்றுங் கருணையிலாத் தண்ணிலவே !
ஆய்வளையென் துன்பம் அறியார்பால்-போய்க்கூறு
'தோழரே ! நும்பிரிவால் தொல்கவின்சேர் நும்செல்வி
பாழாய் அழுகும் பழம்.'

—பூ. ச. கந்தசாமி, தாம்பரம்.

❁

காய்வயிற்றைக் காக்கவே கம்பன் மிகப்புலுகி
வாய்விட்ட தெல்லாமும் வாசகமோ ?–தோய்கருத்தைத்
தூவி எழுசீரிற் சொல்லடைத்த வள்ளுவனை
பாவிற் பழுத்த பழம் !

—டி. வி. பச்சையப்பன், மதுரை.

❁

காய்த்துக் கனிந்தாலும் காசினியார் உண்டாரேல்,
மாய்த்துடலைச் சாய்க்காதோ மா ட்டி-வாய்த்தபுகழ்
தூயதமி ழன்னையுடல் துன்புறுத்தச் செய்யுமடா
தீயகுண இந்திப் பழம்.

—அ. வில்லாளன், அம்மணம்பாக்கம்.

❁

காய்குலைத் தெங்கேகேள் ! கன்னித் தமிழெங்கே?
சாய்தலுறும் இந்திச் சுவரெங்கே?-வாய்க்குமோ
வான்முட்டும் தேப்பலவின் வண்டுலவும் செங்கனிக்குப்
பான்மையில் பாகற் பழம் ?

—குப்பு. இளஞ்செல்வன், திட்டக்குடி.

❁

காயாகும் இந்திதனை நம்மேல்தான் நாட்டிடவே
பேயாக வந்திங்கே பாய்கின்ருர்-ஐயாவோ
நன்ருகத் தோன்றிடினும் நம்மவர்க் கிந்திமொழி
எந்நாளும் நச்சுப் பழம்.

—ப. வளவன், திருப்பனந்தாள்.

❁

காய்பார்த்து வைத்துக் கனியட்டும் என்றேநான்
போய்ப்பார்த்து வந்தேன் பொழுதெல்லாம்-சேய்மையிலே
பார்த்திருந்த காய்சிவக்க அன்போடு தான்பறித்துப்
பார்த்தேன்; வெம்பற் பழம்.

—தொல்காப்பியன், அகரப்பேட்டை.

❁

காய்ச்சி வடித்த கனிரசமும் பின்னடையப்
பாய்ச்சி மனத்தே பதிந்ததமிழ்-ஆட்சியிலே
இந்தியென்ற பேரரக்கி ! இங்குனக்கு வாழ்க்கையிலை
பைந்தமிழே நாளும் பழம்.

—குழந்தை, கருவை.

❁

காய்என்ருள் கையில், கனியென்றேன்; காட்டாமல்
சேய்விழியைக் கட்டினேன் ஓர்துணை ய ல்-வாயிலிட்டுத்
தின்னென்றேன் வாய்சுளித்துத் தூவெனத் துப்பியதும்
சொன்னுள்: புளியம் பழம்.

—க. முத்துச்செல்வம், சோ. கோட்டை.

❁

காய்கின்ற வெய்யிலிலே கால்கடுக்கப் பாடுபட்டுத்
தேய்கின்ற ஏழை யுணவின்றி-சேய்போன்று
வாளா விருப்போர்க்கு வந்தடையும் பொற்றட்டிற்
பாலோடு நல்ல பழம்.

—தி. ந. கோவிந்தராசன், திருச்சி.

❁

காய்கதிர் போயொடுங்கக் கார்குழலிற் பூச்சூடி
காய்நிலவின் மீண்டாள் கணவனெதிர் !–வாய்ச்சொற்குப்
பஞ்சமிலை என்ருலும் பாவையிட்டாள் ஆளனுக்குப்
பஞ்சணையில் ஊடற் பழம்.

—அ. இரத்தினசாமி, கோவிலூர்.

❁

காய்த்துவரும் இந்திதனைக் கண்ணியமாய்க் காத்தாலும்
வாய்த்தநம் வண்டமிழ்க் கீடாமோ–தூய்மைசேர்
இன்பத் தமிழகத்தில் எட்டிபழுத் தாலன்ன
துன்பிற் பதிந்த பழம்.

—அ. கண்ணப்பன், பொன்னேரி.

❁

காய்நிலவு முற்றிக் கனிந்ததுபோல் சோதிமுகம்
வாய்ந்தவளே வற்ருத தேனூற்றே–நோய்செய்தே
கவ்வி யிழுக்குமுன்றன் கண்கள் கருநாவல்;
செவ்விதழோ கொவ்வைப் பழம்.

—உமர், ஆரணி.

❁

காய்விற் கலைமதியே காதற் கனியமுதே
தூய தமிழின் திருமகளே–ஆய்வுடைநற்
பாவின் நவரசத்தைப் பைந்தமிழர்க் கூட்டியருள்
தேவிநீ ஞானப் பழம் !

—அ. கிருஷ்ணன், சரவணாபட்டு.

❁

காய்ந்தாலும் உள்ளம் கலங்காது; என்புருகத்
தேய்ந்தாலும் அன்பூட்டும் தே முதாள்-பாய்ந்தோடும்
தென்றலலை வீசுகையில் தித்திக்கும் செவ்விதழால்
புன்னகையைச் சிந்தும் பழம் !

—சி. பி. சாமி. திருப்பத்தூர்.

❁

காய்தொடுவார் உண்டோ கனியிருக்க என்றுரைத்த
வாய்மைக் 'குறளை' மறந்தேதான்-நாய்தலைத்தல்
போலிருக்கும் இந்திமொழி போற்றுதிர் ! செந்தமிழே
பாலோடு சேர்ந்த பழம்.

—அ. மாரிமுத்து, சென்னை-23.

❁

காய்தணலில் நின்ருலும் கார்குழலி, உன்பேர்தான்
வாய்முழுதும் தேங்கி வழிந்தோடும்;-ஓய்ந்தாலும்
வந்திடுவேன் பெண்ணரசி ! வாட்டந் தவிர்ப்பதற்கே
கொண்டுவந்தேன் கொய்யாப் பழம்.

—சு. கந்தசாமி, நாமக்கல்.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணுசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நா